அகத்தியர் துணை
அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

# ஞானத்திருவடி

ஓங்காரக்குடில் ஆசான் அருளிய சன்மார்க்க உண்மைப் பத்திரிகை
சார்வரி ❁ ஆடி (ஜுலை – 2020) விலை: ரூ.10/–

முருகப்பெருமானின் கல்கி அவதாரம்
தவத்திரு **ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகள்**

## உள்ளடக்கம்

1. சித்தர்கள் போற்றித் தொகுப்பின் சிறப்பு ........ 5

2. சித்தர்கள் போற்றித் தொகுப்பு ........ 6

3. மகான் தன்வந்திரி அருளிய ஆசி நூல் ........ 11

4. 18.02.1988 அன்று அருளிய **குருநாதரின் அருளுரை** **யோகமும், வாழ்க்கையும்** ........ 16

5. ஆனி மாத பௌர்ணமி விழா ........ 42

6. ஆடி மாத பௌர்ணமி விழா ........ 42

7. ஓங்காரக்குடில் வெளியீடுகள் ........ 43

8. ஓங்காரக்குடில் நித்திய செயல்பாடுகள் ........ 53

சிறிதும் கருணையில்லாது உயிர்க்கொலை செய்து உண்ணுகின்ற மக்கள் நட்பு நமக்கு தேவையில்லை!

ஸ்ரீ அகத்தியர் சன்மார்க்க அறக்கட்டளை,
ஓங்காரக்குடில், துறையூர்.

வருகின்ற அரங்க மகானின்
வல்லமையான ஞான உபதேசங்களை
தருமமாக தாங்கி வருகின்ற
தவநூலாம் ஞானத்திருவடி நூலை
நூலை உலகமக்கள் பெற்று
நித்தம் நித்தம் வாசிப்பு செய்து
காலை மாலை பூசையாக
கலியுகத்தார் சித்தர்கள் நாமசெபம்
செபதபம் செய்து வருகவே
சிறப்பான பாதுகாப்பு கிட்டும்
அபயமென ஆறுமுகன் சக்தியான
அரங்கஞானி திருவடி சேவித்து

– மகான் தன்வந்திரி ஆசிநூல்

அன்பார்ந்த வாசகர்களுக்கு வணக்கம்,

**ஞானத்திருவடி நூலே ஞானிகள் திருவடியாகும்.**

ஞானத்திருவடி என்னும் நூல் முற்றுப்பெற்ற மகான்களைப் பற்றி பேசுவதாகும். இந்நூலை வாங்குதல், படித்தல், மற்றவர்களுக்கு வாங்கிக் கொடுத்தல் ஆகிய அனைத்துமே ஜென்மத்தைக் கடைத்தேற்ற உதவும். எனவே இந்நூல் ஞானவாழ்வு விரும்புகிறவர்களுக்கு ஒரு வரப்பிரசாதம் ஆகும். இந்நூல் வீட்டில் இருந்தால் நவகோடி சித்தர்களும், சித்தர்களுக்கெல்லாம் தலைவராகிய அகத்தீசரும், அவருக்கு ஆசானாகிய சுப்பிரமணியரும் நமது வீட்டில் இருந்து அருள் செய்வதாக எண்ணவேண்டும்.

மேலும் ஓங்காரக்குடில் ஆசான் 44 ஆண்டு காலம் ஓங்காரக்குடிலில் கடுந்தவம் இருந்து வருகிறார்கள். உலக மக்களை கடவுளின் பிள்ளைகளாக பார்த்து, அவர்களுக்கு வரும் துன்பங்களிலிருந்தும், துயரங்களிலிருந்தும் விடுவித்து ஞானியர்களின் திருவடிதான் உண்மை ஆன்மீகம் என்று சொல்லி அவ்வழியில் நம்மை அழைத்துச் செல்லும் ஓங்காரக்குடில் ஆசான் முருகப்பெருமானின் கல்கி அவதாரம் **தவத்திரு ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகள்** அவர்கள், ஞானிகளின் பாடல்களில், தான் உணர்ந்த பல இரகசியங்களை நம்பால் கருணைகொண்டு எளிய முறையில் அருளிய அருளுரைகள் அடங்கியதுதான் **ஞானத்திருவடி** நூல்.

விரைவில் எதிர்பாருங்கள் அற்புதமான “**ஞானயுகம்**” அமைகின்றதை!

அன்புடன்
இரா.மாதவன்.

அருட்பெருஞ்சோதி! அருட்பெருஞ்சோதி!! தனிப்பெருங்கருணை! அருட்பெருஞ்சோதி!!

**பாவபரிகாரமும் சாபவிமோசனமும் பெற்றுத்தரவல்ல அற்புத பாராயண நூல்**

**சித்தர்கள் போற்றித் தொகுப்பு**

ஞானிகள் அத்துணைபேரும் முருகப்பெருமானால் வாசி நடத்திக் கொடுக்கப்பட்டு மும்மலக் குற்றத்தை வேருடன் அறுத்து வெற்றி கண்டவர்கள். அவர்களுக்கு இறப்பும் பிறப்பும் இல்லை. நரை, திரை, மூப்பு இல்லை. சித்தர்கள் அனைவரும் மரணமில்லாப் பெருவாழ்வை பெற்றவர்கள். ஆக்கல், காத்தல், அழித்தல், அருளல், மறைத்தல் எனும் ஐந்தொழில் செய்யும் வல்லமையை பெற்றவர்கள். இவர்களின் திருவடிகளை பூஜித்தாலே நாம் செய்த பாவங்களெல்லாம் நீங்கிவிடும். பாவங்களுக்கு காரணமான உயிர்க்கொலை செய்தல், புலால் உண்ணுதல், மது அருந்துதல், சூதாடுதல், வரவுக்கு மீறிய செலவு செய்தல் இன்னும்பல தீவினை செயல்களெல்லாம் கீழ்க்கண்ட சித்தர்கள் போற்றித் தொகுப்பை படித்தால் நீங்கிவிடும். பெருமைக்குரிய சித்தர்கள் போற்றித் தொகுப்பை ஒரு தீபம் ஏற்றி வைத்து பயபக்தியுடன் பணிந்து வணங்கி பாராயணம் செய்தால் இல்லறமும் சிறக்கும், வீடுபேறாகிய ஞானமும் கைகூடும்.

கல்வி கற்கும் மாணவர்கள் தினசரி பாராயணம் செய்தால், கல்வியில் சிறந்த தேர்ச்சியை பெறுவதோடு நல்ல வேலை வாய்ப்பும் அமையப் பெறுவார்கள்.

ஜென்மத்தைக் கடைத்தேற்ற விரும்புகின்ற ஆன்மீகவாதிகளுக்கு இந்த சித்தர்கள் போற்றித் தொகுப்பானது, ஜென்மத்தைக் கடைத்தேற்றிக் கொள்ள கிடைத்த ஒரு அற்புதமான பாராயண நூலாகும்.

எதை விரும்பி சித்தர்கள் போற்றித் தொகுப்பை பாராயணம் செய்கிறீர்களோ அதை அப்படியே பெற்றுத் தரவல்ல அற்புதமான பாராயண நூல் சித்தர்கள் போற்றித் தொகுப்பாகும். சித்தர்கள் சாதி, மதம், இனம், மொழி, தேசம் கடந்து மனிதகுலத்திற்கு பொதுவானவர்கள். ஆதலினால் சித்தர்கள் போற்றித் தொகுப்பை எல்லா சமயத்தினரும், எல்லா நாட்டினரும், பேதாபேதமின்றி பாராயணம் செய்யலாம். ஆண், பெண், சிறார், பெரியோர், குடும்பஸ்தன், துறவி, பஞ்சபராரிகள், ஏழை எளியோர் என யாவரும் பாராயணம் செய்யலாம். கணவனை இழந்தவர்களும் தடையின்றி விளக்கேற்றி பாராயணம் செய்யலாம். எந்த கட்டுப்பாடும் இல்லை, எந்த சடங்குகளும் இல்லை.

அற்புதம் வாய்ந்த இந்த சித்தர்கள் போற்றித் தொகுப்பை பல கோடி பேர் பாராயணம் செய்து எண்ணற்ற பலன்களை அடைந்ததோடு அவர்களது பிரச்சனைகள் தீர்ந்திடவும், வேண்டுகோள்கள் நிறைவேறி மனம் மகிழ்ந்ததும், இவ்வுலகம் கண்ட அற்புத உண்மையாகும். இந்த சித்தர்கள் போற்றித் தொகுப்பை இன்னும் பலகோடி மக்கள் பாராயணம் செய்து மேன்மை அடைவார்கள் என்பது ஞானிகள் வாக்காகும்.

இதுவரையிலும் ஞானவாழ்வு அடைவதற்கு துணையாக இருந்ததும், இனி அடையப்போகின்றவர்களுக்கும் சித்தர்கள் போற்றித் தொகுப்பு துணையாகும் என்பது சத்திய வாக்காகும்.

## துவக்கப்பாடல்

திருவடி ஞானம் சிவமாக்கு விக்கும்
திருவடி ஞானம் சிவலோகம் சேர்க்கும்
திருவடி ஞானம் சிறைமலம் மீட்கும்
திருவடி ஞானமே திண்சித்தி முத்தியே.

திருமந்திரம் : திருவடிப்பேறு : 1598

ஞானியர்களின் திருவடி பூஜைதான் உண்மை ஆன்மீகம் என்று
உலகறியச் செய்யும் வள்ளல்,
முருகப்பெருமானின் கல்கி அவதாரம்

தவத்திரு **ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகள்** அவர்கள்

**தொகுத்து வழங்கிய**

# சித்தர்கள் போற்றித் தொகுப்பு

| | | | |
|---|---|---|---|
| ஓம் | அகத்தியர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | அகப்பைச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | அசுவினித்தேவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | அத்திரி மகரிஷி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | அநுமான் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | அம்பிகானந்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | அருணகிரிநாதர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | அருள்நந்திசிவாச்சாரியார் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | அல்லமாபிரபு | திருவடிகள் போற்றி | |
| ஓம் | அழுகண்ணிச்சித்தர் | திருவடிகள் போற்றி | 10 |
| ஓம் | இடைக்காடர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | இராமலிங்கசுவாமிகள் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | இராமதேவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | இராமானந்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | உமாபதி சிவாச்சாரியார் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | ஔவையார் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கஞ்சமலைச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கடைப்பிள்ளைச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கடுவெளிச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கண்ணானந்தர் | திருவடிகள் போற்றி | 20 |

| | | | |
|---|---|---|---|
| ஓம் | கண்ணிச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கணநாதர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கணபதிதாசர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கதம்பமகரிஷி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கபிலர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கமலமுனிவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கருவூர்தேவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கல்லுளிச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கலைக்கோட்டு முனிவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கவுபாலச்சித்தர் | திருவடிகள் போற்றி | 30 |
| ஓம் | கணராமர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | காகபுஜண்டர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | காசிபர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | காலாங்கிநாதர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | குகைநமச்சிவாயர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | குதம்பைச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | குமரகுருபரர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | குருதட்சணாமூர்த்தி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | குருராஜர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | குறும்பைச்சித்தர் | திருவடிகள் போற்றி | 40 |
| ஓம் | கூர்மானந்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கொங்கணேஸ்வரர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கோரக்கர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கௌசிகர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கௌதமர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சங்கமுனிச் சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சங்கர மகரிஷி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சங்கிலிச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சச்சிதானந்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சட்டநாதர் | திருவடிகள் போற்றி | 50 |
| ஓம் | சண்டிகேசர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சத்யானந்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சிவயோகமாமுனிவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சிவவாக்கியர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சிவானந்தர் | திருவடிகள் போற்றி | |

| | | | |
|---|---|---|---|
| ஓம் | சுகப்பிரம்மர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சுந்தரானந்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சுந்தரமூர்த்தி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சூதமுனிவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சூரியானந்தர் | திருவடிகள் போற்றி | 60 |
| ஓம் | சூலமுனிவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சேதுமுனிவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சொரூபானந்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | ஜம்பு மகரிஷி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | ஜமதக்னி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | ஜனகர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | ஜனந்தனர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | ஜனாதனர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | ஜனக்குமாரர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | ஜெகநாதர் | திருவடிகள் போற்றி | 70 |
| ஓம் | ஜெயமுனிவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | ஞானச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | டமாரானந்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | தன்வந்திரி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | தாயுமான சுவாமிகள் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | தானந்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | திரிகோணச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | திருஞானசம்பந்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | திருநாவுக்கரசர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | திருமாளிகைத் தேவர் | திருவடிகள் போற்றி | 80 |
| ஓம் | திருமூலதேவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | திருவள்ளுவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | துர்வாசமுனிவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | தேரையர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | நந்தனார் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | நந்தீஸ்வரர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | நாதாந்தச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | நாரதர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | நொண்டிச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | பட்டினத்தார் | திருவடிகள் போற்றி | 90 |

| | | | |
|---|---|---|---|
| ஓம் | பத்ரகிரியார் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | பதஞ்சலியார் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | பரத்துவாசர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | பரமானந்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | பராசரிஷி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | பாம்பாட்டிச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | பிங்களமுனிவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | பிடிநாகீசர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | பிருகுமகரிஷி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | பிரும்மமுனிவர் | திருவடிகள் போற்றி | 100 |
| ஓம் | பீர்முகமது | திருவடிகள் போற்றி | |
| ஓம் | புண்ணாக்கீசர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | புலத்தீசர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | புலிப்பாணிச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | பூனைக்கண்ணார் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | போகமகாரிஷி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | மச்சமுனிவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | மஸ்தான் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | மயூரேசர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | மாணிக்கவாசகர் | திருவடிகள் போற்றி | 110 |
| ஓம் | மார்க்கண்டேயர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | மாலாங்கன் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | மிருகண்டரிஷி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | முத்தானந்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | மெய்கண்டதேவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | மௌனச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | யாகோபு | திருவடிகள் போற்றி | |
| ஓம் | யூகிமுனிவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | யோகச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | யோகானந்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | ரோமரிஷி | திருவடிகள் போற்றி | 121 |
| ஓம் | வசிஷ்டமகரிஷி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | வரதரிஷி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | வரரிஷி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | வராகிமிகி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | வால்மீகி | திருவடிகள் போற்றி | |

ஓம் விசுவாமித்திரர் திருவடிகள் போற்றி
ஓம் வியாக்ரமர் திருவடிகள் போற்றி
ஓம் வியாசமுனிவர் திருவடிகள் போற்றி
ஓம் விளையாட்டுச்சித்தர் திருவடிகள் போற்றி
ஓம் வேதாந்தச்சித்தர் திருவடிகள் போற்றி **131**
ஓம் எண்ணிலா கோடி சித்தரிஷி கணங்கள்
திருவடிகள் போற்றி போற்றி.

## நிறைவுப்பாடல்

வாழ்கவே வாழ்களன் நந்தி திருவடி
வாழ்கவே வாழ்க மலமறுத் தான்பதம்
வாழ்கவே வாழ்கமெய்ஞ் ஞானத் தவன்தாள்
வாழ்கவே வாழ்க மலமிலான் பாதமே.

திருமந்திரம் 3047

மேற்கண்ட 131 சித்தர்கள், மகான்களின் திருவடிகளை தினசரி காலையும் மாலையும் போற்றி பூஜை செய்வதே சிறப்பறிவாகும். சிறப்பறிவு பெற்றவர்களுக்கு குடும்ப ஒற்றுமை, புத்திர பாக்கியம், உடல் ஆரோக்கியம் போன்ற நல்வினைகள் பெருகி, மது அருந்துதல், புலால் உண்ணுதல், சூதாடுதல் போன்ற தீவினைகள் நீங்கிவிடும். மேலும், மாதம் ஒருவருக்கோ அல்லது இருவருக்கோ பசித்த ஏழைகளுக்கு பசியாற்றியும் வந்தால், பாவம் புண்ணியம் பற்றி உணர்ந்து புண்ணியம் பெருகி ஞானியாவார்கள் என்பது சத்தியம்.

## ஓங்காரக்குடில் ஆசான் ஆசி!



ஓங்காரக்குடிலில் நடைபெறும் அன்னதானம் மற்றும் அறப்பணிகளுக்காக, தமிழகமெங்கும் ஸ்ரீ அகத்தியர் சன்மார்க்க சங்கம் சார்பாக ஞானத்திருவடி நூலை பொதுமக்களுக்கு கொண்டு சேர்க்கும் அன்பர்களுக்கும், அவர்கள் குடும்பத்தாருக்கும் எல்லாம் வல்ல ஞானிகள் அருள் கிட்டி எல்லா நன்மைகளும் அடைவார்கள். மேலும் உடல் ஆரோக்கியமும், நீடிய ஆயுளும், எல்லா நலமும் வளமும் பெறுவார்கள். மேலும் ஞானமும் சித்திக்கும் என்று ஓங்காரக்குடில் ஆசான் ஆசி வழங்கியுள்ளார்கள்.



அன்பான வாசகர்களே வணக்கம்

**உங்கள் ஆண்டு சந்தாவை புதுப்பித்துவிட்டீர்களா!**

ஞானத்திருவடி நூலை படித்து, உங்கள் உணர்வுகளை எங்களோடு பகிர்ந்துகொள்ள அன்போடு அழைக்கின்றோம்.

– அன்பன் இரா.மாதவன், 98424 55661.

## சார்வரி வருடம் ஆடி மாத ஞானத்திருவடி நூலிற்கு

# மகான் தன்வந்திரி அருளிய ஆசி நூல்

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன் M.A., B.Ed.,
திருச்சி. செல் : 99655 71837

1. அருளமுது தந்து உலகினில்
அற்புதம் நிகழ்த்தும் ஞானியே
வரமென தரும பலம் கூட்டி
வையகம் காத்திடும் தவசியே

2. தவசியே ஆறுமுக அரங்கனே
தானுன் கரம்பட சக்தியாக
அவணியில் வரமாக வருகின்ற
ஆற்றல்மிக்க ஞானத்திருவடி நூலுக்கு

3. நூலுக்கு சார்வரி ஆடித் திங்களுக்கான
நிலமதனில் ஆசிபலன் தன்னை
காலமதனில் தன்வந்திரி யானும் உரைப்பேன்
கலியுக காப்பின் சக்தியாக வரும்

4. வருகின்ற அரங்க மகானின்
வல்லமையான ஞான உபதேசங்களை
தருமமாக தாங்கி வருகின்ற
தவநூலாம் ஞானத்திருவடி நூலை

5. நூலை உலகமக்கள் பெற்று
நித்தம் நித்தம் வாசிப்பு செய்து
காலை மாலை பூசையாக
கலியுகத்தார் சித்தர்கள் நாமசெபம்

6. செபதபம் செய்து வருகவே
சிறப்பான பாதுகாப்பு கிட்டும்
அபயமென ஆறுமுகன் சக்தியான
அரங்கஞானி திருவடி சேவித்து

7. சேவித்து ஞானவழித் தொடர
செப்பிடுவேன் பாதுகாப்பு கிட்டும்
புவிதன்னில் கலியின் துன்பமாக
பேரிடர் நச்சுக்கிருமியாக கரம் நீட்டி

8. நீட்டியே தீவினை சூழ்ந்தோரை
நீதி மறந்து ஊழலில் கலந்தோரை
திட்டமிட்டு சுயநலம்பட நடந்து
தேசநலம் கருதா வாழ்பவரை

9. வாழ்வினில் பெண்மைக்கு தூசிதம்
வக்கிர கொடூரம் புரிபவரை
தாழ்வென மத இன சாதி பேதம்
தரணியில் கொண்டு நிந்திப்பவரை

10. நிந்திப்பவரை உயிர்க்கொலை செய்பவரை
நிலஅபகரிப்பு செய்து வாழ்வோரை
சிந்தையில் மக்கள் நலம் பேணா
சேவைக்கு வந்தும் ஆளுமை தன்னை

11. தன்னை தன்னலம்பட நடத்துபவரை
தவறாக மக்களை வழிநடத்துபவரை
இன்னல் தந்து அழிக்கின்ற
இடர் சக்தியாக பரவி நசிக்க

12. நசிவிலிருந்து உலக மக்கள் மீள
ஞான வழிகட்கு வந்து
தேசிகனார் தரும் அருளமுது உண்டு
தீட்சை ஆசிதனை அடைந்து

13. அடைந்து உண்மை ஞானமான
ஆறுமுகனார் சன்மார்க்க மிக்க
தடையற சத்திய நெறியை ஏற்று
தரணியோர் தொடர்ந்து வந்து

14. வந்துமே உயிர்க்கொலை தவிர்த்து
வள்ளல் தன்மைபட நடந்து
சிந்தையில் தன்னார்வ தொண்டும்
சேவையினையும் பெருக்கி வர

15. வருகவே அன்னதானம் செய்து
வையகம் காப்பு பெறும்படி
முருகப் பெருமான் வழிபாட்டுடன்
முழுமையான தரும சக்தி பரவவே

16. பரவவே கலித்துன்பம் ஆக
பரவிடும் பேரிடர் முடிவுறும்
தரணியில் ஞான தரும ஆட்சியாக
தலைமைகள் நடத்தி வந்தால் தான்

17. வந்தால்தான் உயிர்ப்பலி குறையும்
வலிமையான நச்சுக்கிருமி அல்லல்
இந்தவித நிலையிலிருந்து விலகி
இயல்பான நிலைக்கு பாதுகாப்பாய் மாறும்

18. மாறுதலை செய்ய வேண்டியே
மண்ணுலக ஞானிகளெல்லாம்
ஆறுமுக அரங்கன் தருமத்தில்
ஆற்றலாக இறங்கி அருள

19. அருளவே ஞான சக்தியாக
அழிவை போக்கும் மீட்கும் சக்தியாக
தருமபலமே பிரதானமாக இருக்க
தரணியோர் தரும சிந்தைபட இணைந்து

20. இணைந்து எங்கிலும் தருமம்
இயக்கிட உண்மை வழி நடந்திட
துணைபட ஞானிகள் சக்தியுடன்
தேசிகனருளும் ஆறுமுகன் ஆசியும்

21. ஆசியும் தயவும் கூடியே
அகிலத்தார் அழிவிலா காப்பு
தேசமெங்கிலும் கண்டு சிறப்பர்
திருவருளாக வரும் அரங்கன் தவ நூலை

22. நூலை வணங்கி உலகோர்
ஞானமாக வாசித்து வருக
காலனையும் வென்று கலியில்
கடைத்தேற்றம் இலகுவாய் அடைவர் ஞானத்திருவடி நூலுக்கு ஆசி முற்றே.

–சுபம்–

முருகப்பெருமான் துணை

சார்வரி ஆண்டு ஆடி மாதத்திற்கான ஞானத்திருவடி நூலிற்கு மகான் தன்வந்திரி அருளிய ஆசி நூலின் சாரம் :

உண்ணும் உணவினையே ஞானிகள் அருள் பார்வையால் அருளமுதாக மாற்றி மக்களுக்கு அளித்து மக்களின் பசிப்பிணியினை போக்கியும் அவர்களது பிறவிப் பிணியையும் போக்கிட வழிவகைகள் தந்து அற்புதங்களை நிகழ்த்துகின்ற மகா ஞானியே, உலகின் தர்மபலத்தினை பெருக்கிட எல்லையில்லாது தருமங்களை செய்து அற்புதம் செய்து தர்மபலத்தால் உலகை காக்கும் மகா தவசியே, ஆறுமுக அரங்கமகா தேசிக மகா ஞானியே, தமது கரத்தினில் தவழ்ந்து உலக மக்களுக்கு

கிடைத்திட வரமாக ஞானத்துணையாக வெளிவரும் ஞானத்திருவடி நூலிற்கு சார்வரி வருடம் ஆடி மாதத்திற்கான ஆசி நூல்தனை தன்வந்திரி யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் தன்வந்திரி பகவான்.

கலியுகத் துன்பங்களில் இருந்து மக்களை காக்கின்ற மகா சக்தியாக அவதரித்த ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் ஞான உபதேசங்களை தாங்கி வருகின்ற ஞானத்திருவடி நூலினை உலக மக்களெல்லாம் வாங்கி படித்து பூஜைகள்தனை காலை மாலை என இருவேளைகளும் செய்வதுடன் சித்தர்களின் நாமஜெபங்களை பூஜையில் ஜெபித்து வரவர, அவர்க்கெல்லாம் சிறப்புமிக்க ஞானிகளின் அருள் பாதுகாப்பு கிடைத்திடும்.

ஆறுமுகப்பெருமான் முருகப்பெருமானின் மகாசக்தியாக விளங்கி நிற்கின்ற ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் திருவடிகளே கதியென முழுச்சரணாகதியினை அடைந்து அரங்கரின் உபதேசங்களை ஏற்றுக் கொண்டு அரங்கரின் ஞானவழிகளை கடைப்பிடித்து அரங்கரை பின்தொடர்ந்து வரவர, அவர்களுக்கு ஞானிகளின் அருள் பாதுகாப்பு கிடைத்திடும்.

முன் ஜென்மங்களிலே அடாது பாவம் செய்து தீயவினைகளால் சூழ்ந்து உள்ளவர்களையும், தர்ம நீதியை மறந்து தன்னலமாய் நடந்து ஊழல் செய்து வாழ்பவர்களையும், தேசத்தின் நலன் கருதாமல் சுயநலமாய் வாழ்பவர்களையும், பெண்களை தாயாக மதித்து போற்றாமல் பெண்மைக்கு பங்கமும் களங்கமும் உண்டாக்குபவர்களையும், வக்கிரமானவர்களையும், கொடூர செயல்களை செய்பவர்களையும், சாதி, மத, இன பேதம் உடையவர்களாக நடந்து உலகினில் பிறர் தம்மை நிந்தித்து தாழ்வுபட நடந்து கொள்பவர்களையும், உயிர்க்கொலை செய்வோரையும், புலால் உண்போரையும், பிறர் நிலத்தினை அபகரித்து வாழ்வோரையும், மக்களுக்கு சேவை செய்வேன் எனக்கூறி ஆட்சிக்கு வந்த பின்னும் மக்கள் நலத்தை கருத்தில் கொள்ளாமல் தன்னலமாக ஆட்சி செய்வோர்களையும், நம்பிய மக்களை தவறான வழியில் நடத்தி செல்பவர்களையும் நச்சுக்கிருமிகள் தாக்கி அவர்களுக்கு துன்பங்களைத் தந்து இடர் சக்தியாக உலகமெங்கும் பரவி தீமைகள் செய்தோரை அழித்து வருகின்றதப்பா.

உலக மக்களே இந்தவித இடர்பாடுகளில் இருந்து நச்சுக் கிருமிகளால் உண்டாகின்ற பேரிடரிலிருந்து தப்பிக்க வேண்டுமாயின் நீங்களெல்லாம் மேன்மைமிக்க உண்மை ஞானவழிக்கு வந்து விடுங்கள். ஆறுமுக அரங்கமகா தேசிகனார் தருகின்ற அருளமுதினை உண்டு, அரங்கரிடத்து தீட்சை உபதேசம் அடைந்து அரங்கர் உபதேசிக்கின்ற உண்மை ஞானமாகிய முருகப்பெருமானின் சன்மார்க்க சத்திய நெறியினை ஏற்றுக் கொண்டு தொடர்ந்து நடந்து வருவதுடன் உயிர்க்கொலை தவிர்த்து, புலால் மறுத்து, சுத்த சைவ உணவினை மேற்கொண்டு

நடப்பதுடன், தர்மங்களை தாராளமாய் செய்தும் வருவதுடன், தன்னார்வமாய் தொண்டுகளை செய்தும் வருவதுடன், பொதுச் சேவைகளையும் அதிகமாகச் செய்தும் வருவதுடன், பசித்தவர்களது பசிப்பிணியை போக்கி தர்மங்களை செய்தும் வருவதுடன் முருகப்பெருமானின் வழிபாட்டுடன் நடந்துவர உலகமெங்கும் தருமசக்தி பரவிட பரவிட, இவ்வுலகை பற்றியுள்ள கலியுக துன்பமாக உலகமெங்கும் பரவி வருகின்ற பேரிடர்கள் முடிவிற்கு வந்திடுமப்பா.

உலகினில் தற்சமயம் நடக்கின்ற ஆட்சி முறைகளெல்லாம் தருமத்தின் ஆட்சியாக ஞானவழி நடத்துகின்ற ஆட்சியாக மாறினால்தான் இந்த உலகினைப் பற்றியுள்ள உயிர்ப்பலிகள் குறைந்திடும், வலிமைமிக்க நச்சுக்கிருமியின் அல்லல் எல்லாம் உலகினை விட்டு விலகி, இயல்பான நிலைக்கு வந்து பாதுகாப்பான உலகமாக மாறிடும்.

இவ்வுலகினில் மாற்றங்களை செய்திட வேண்டியே உலக ஞானிகளெல்லாம் ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் தருமங்களிலே பெரும் ஆற்றலாக இறங்கி அருள் செய்து வருகின்றபடியினாலே ஞானிகள் அருளும் ஞான சக்தியே இவ்வுலகின் அழிவினை போக்குகின்ற மகா சக்தியாக கலியுகத் துன்பங்களில் இருந்து மக்களை மீட்கும் சக்தியாக இருக்கின்றபடியினாலே உலக மக்களெல்லாம் தருமசிந்தனையுடன் நடந்து அரங்கனின் தருமத்தில் இணைந்து செயல்பட உலகமெங்கும் தருமம் இயங்கிட, மக்கள் உண்மை ஆன்மீக வழியில் நடந்து வரவர, உலகினில் மகா ஞானிகளின் அருள் சக்தி பெருகபெருக, ஞானிகளின் துணையை இவ்வுலகினர் பெற்று முருகப்பெருமான் ஆசியுடன் தேசிகனாரின் ஆசியும் தயவும் பெருகி உலகோர் அழிவுகளில் இருந்து மீண்டு அழிவிலா நிலை கண்டு சிறப்படைவார்கள்.

கடவுளின் திருவருளாக வருகின்ற ஆறுமுக அரங்கமகானின் தவநூலினை ஞானநூலாக, வேதநூலாக எண்ணி வாசிப்பதுடன், பிறர் வாசிக்க வாங்கிக் கொடுத்தும் வர, அவர்கள் காலனாகிய எமனையும் வென்று இக்கலியுகத்திலும் விரைந்து ஜென்மத்தை முருகப்பெருமானின் அருளால் கடைத்தேற்றிக் கொள்வார்கள் எனக் கூறுகிறார் மகான் தன்வந்திரி பகவான்.

–சுபம்–

**எல்லா துன்பங்களையும் வென்று வெற்றி காண விரும்புகின்றவர்கள்**
**“ஓம் சரவணஜோதியே நமோ நம”**
**என்ற மந்திரத்தை காலை மற்றும் மாலையில் சிறிது நேரம் ஜெபித்து வரவும்.**
**– மகான் ஆறுமுக அரங்கமகா தேசிகர்.**

# முருகன் திருவடி வாழ்க

திருச்சி மாவட்டம், துறையூர், ஓங்காரக்குடிலாசான்,
முருகப்பெருமானின் கல்கி அவதாரம்
தவத்திரு **ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகள்** அவர்கள்
ஸ்ரீ அகத்தியர் சன்மார்க்க சங்கத்தில்
18.02.1988 அன்று அருளிய அருளுரை

# யோகமும் வாழ்க்கையும்

ஓம் அகத்தீசாய நம ஓம் அகத்தீசாய நம ஓம் அகத்தீசாய நம
ஓம் அகத்தீசாய நம ஓம் அகத்தீசாய நம ஓம் அகத்தீசாய நம
ஓம் அகத்தீசாய நம ஓம் அகத்தீசாய நம ஓம் அகத்தீசாய நம

அன்புள்ள சன்மார்க்க சங்க உறுப்பினர்களே, பெரியோர்களே உங்கள் அனைவருக்கும் வணக்கம்.

**வளியினை வாங்கி வயத்தில் அடக்கில்**
**பளிங்கொத்துக் காயம் பழுக்கினும் பிஞ்சாம்**
**தெளியக் குருவின் திருவருள் பெற்றால்**
**வளியினும் வேட்டு வளியனு மாமே.**

**– திருமந்திரம் – பிராணாயாமம் – கவி எண் 569.**

**பளிங்கொத்துக் காயம் பழுக்கினும் பிஞ்சாம்** – திடமான உடம்பு முதுமையடைந்தால் ஞானிகளின் ஆசியால் மீண்டும் இளமை வரும்.

**வளியினை வாங்கி வயத்தில் அடக்கில்** – காற்றை வாங்கி வயிற்றில் அடக்க வேண்டும். குருவின் ஆசியில்லாமல் இதை செய்ய முடியாது.

**தெளியக் குருவின் திருவருள் பெற்றால்** – குருவின் திருவருளைப் பெற்றால் இந்தக் காற்று உன் வசப்படும். காற்று வசப்பட்டுவிட்டால் நினைத்த நேரத்தில் அண்டமெல்லாம் நொடிப்பொழுதில் சென்று வரலாம். இதுதான் காற்று வசப்பட்ட மக்களுடைய பெருமை. இதன் இரகசியத்தை யார் அறிந்தாரோ அவரை குருவாக ஏற்றுக் கொண்டு, அவர் திருவடியைப் பற்றி பூஜிக்க வேண்டும்.

சிலர் காற்றை ரேசித்து பூரித்து புருவமத்தியில் செலுத்துவார்கள். உந்திக்கமலத்தின் கீழ் கருவாய்க்கும் எருவாய்க்கும் மத்தியில் உருத்தரித்த நாடி உள்ளது. அந்தக் காற்று வீணாத்தண்டு வழியாக வந்து, அந்த உருத்தரித்த நாடியில் அரை அங்குலத்தில் தங்கும். அதற்கு மேல் காற்று செல்ல முடியாது.

அந்தக் காற்று உருத்தரித்த நாடியில் தங்கிய அன்றே அவன் ஓங்கார ரீங்காரத்தை கேட்பான். இதெல்லாம் ஆசான் தயவை கொண்டுதான் செய்ய முடியும். ஆசான் தயவால்தான் இந்த வாய்ப்பு கிடைக்கும். அரை அங்குலம் தங்கிய அந்தக் காற்றுதான் ஓங்கார ரீங்காரத்தை உண்டாக்கும், தசநாதத்தை உண்டாக்கும்.

அப்படி தங்கிய அந்தக் காற்று உடம்பில் மெல்ல அக்கினியை எழுப்பும். இதனால் அணுஅணுவாக அக்கினி ஏறும். பத்து பதினைந்து வருடம் உடம்பில் உள்ள கசடெல்லாம் வியர்வையாகவும், மல, ஜல, சுக்கிலமாகவும் வெளியேறும். இதனால் அசுத்தம் நீங்கிவிடும். இப்படி நீங்கினால் அது சுத்த உடம்பு. அந்த உடம்பின் இரகசியத்தை ஆசான் சுட்டிக் காட்டுவார்.

**உண்மையான சுக்கில முபாயமா யிருந்ததும்**
**வெண்மையாகி நீரிலே விரைந்து நீரதானதும்**
**தண்மையான காயமே தரித்துரூப மானதும்**
**தெண்மையான ஞானிகாள் தெளிந்துரைக்க வேணுமே.**

**– மகான் சிவவாக்கியர் – கவி எண் 251.**

வாசியைப் பற்றி அறிவதற்கு முதலில் வாத, பித்த, சிலேத்தும இயக்கத்தை அறிந்திருக்க வேண்டும்.

இலேசாக மூச்சுக் காற்றை ரேசித்து நிறுத்தினாலே உள்ளே காற்று உருவாகும். அந்தக் காற்று விநாடிக்கு விநாடி அதிகரிக்கும். அப்படி உருவான காற்று நாலாபக்கமும் போக பார்க்கும். எங்கும் செல்ல முடியாதபோது எங்கெல்லாம் மென்மையான பகுதி இருக்கிறதோ, அந்தப் பகுதியை கிழித்துக் கொண்டு வெளியேறும். இதனால் அவன் இறந்து போவான். இதைக் கண்ட சிலபேர் சாமி சமாதியடைந்து விட்டார், பரிபூரணமாகிவிட்டார் என்பான். இப்படி அநியாயமாக சாவதுதான் யோகமா?

**காணும் மூச்சடக்கி விழியதும் உருட்டிக்**
**கபாலமும் திறந்தனர் கோடி**
**கனத்த வாய்வதனால் குன்மநோய் அணுகி**
**கலங்கினோர் அவர்ஒரு கோடி**
**தோணும் மெய்மறந்து சுழன்று உடன்எழும்பி**
**சொக்கினோர் அவர்ஒரு கோடி**
**சூலை வாய்வு அணுகி சுவாலையும் எழும்பிச்**
**சுரமதால் இறந்தனர் கோடி**
**ஊண உண்நாக்கை அண்ணாக்கையுள் தூக்கி**
**உள்ளடங் கிணர்களுங் கோடி**
**உயர சாண்நீள முழுவதும் எழும்பி**
**ஓங்கியே ஒடுங்கினோர் கோடி**
**பேண அதிசார பேதிவந்து அணுகிப்**
**பிறவியும் இழந்தனர் கோடி**
**பெருமையாய்க் கர்ப்ப சாதனை அறியாது**
**பிராணனும் அழிந்து மாண்டனரே.**

**– மகான் புலத்தியர் கற்பம் 300 – கவி எண் 97.**

**காணும் மூச்சடக்கி விழியதும் உருட்டிக் கபாலமும் திறந்தனர் கோடி** – அடைபட்ட காற்று அங்கும் இங்கும் செல்ல முயற்சிக்கும். கடைசியில் கண், காது, மூக்கு என எங்கெல்லாம் மென்மையான பகுதி இருக்கிறதோ, அந்த பகுதி வழியாக வெடித்து வெளியேறும். இப்படி இறந்தவர்கள் பலகோடி பேர்.

**கனத்த வாய்வதனால் குன்மநோய் அணுகி கலங்கினோர் அவர்ஒரு கோடி** – வாசியை கட்டுவதால் உஷ்ணம் அதிகமாகி மலச்சிக்கல் உண்டாகும். இதனால் அபான வாயு மேல்நோக்கி இரத்தம் கெட்டுவிடும். இதனால் உருவாகின்ற அசுத்தக் காற்றால் குன்மநோய் உண்டாகி இவன் புழுவாய் துடிதுடித்து இறப்பான். இப்படி இறந்தவர்கள் கோடி என்கிறார். இவர்களுக்கு சுட்டிக்காட்ட ஆசான் இல்லாததால்தான் இப்படியெல்லாம் முயற்சித்து இறந்து போனார்கள்.

**தோணும் மெய்மறந்து சுழன்று உடன்எழும்பி சொக்கினோர் அவர்ஒரு கோடி** – தன்னை மறந்த நிலையில் காற்றை அப்படியே நிறுத்துவான். இந்தக் காற்று உடம்பில் பல இடங்களில் தங்கி அப்படியே நின்றுவிடும். அப்படியே அந்த இயக்கம் நின்று, அவன் இறந்து போவான்.

ஞானிகள் கண்ணை மூடி பார்த்தால், ஒரு கோடி சூரியபிரகாசம் தெரியும். அந்த சூரிய வெளிச்சம் கண்ணுக்கு குளிர்ச்சியாக இருக்கும். அதில் மெய் மறந்து இருப்பதே மோனமாகும். அது தன்னை மறந்த நிலை. ஜோதி கண்ட பின் மௌனமாக இருப்பார்கள், பேச மாட்டார்கள்.

இதையெல்லாம் அறியாத இவன் காற்றை ரேசித்து அப்படியே நிறுத்துவான். அப்படி நிறுத்தநிறுத்த புவி ஈர்ப்பு சக்தியிலிருந்து சற்று விடுபடுவான். ஒரு சாண் அப்படியே உயர எழும்புவான். காற்றை நிறுத்திவிட்டு தன்னை மறந்த நிலைக்கு சென்று விட்டான் என்றால் அப்படியே இறந்து போவான்.

பிராணாயாமம் என்கிற யோகப்பயிற்சியைப் பற்றியும், வாசி வசப்பட்ட மக்கள் அடையக் கூடிய நன்மைகளைப் பற்றியும், அதனுடைய தாத்பரியம் தெரியாமல் செய்த மக்கள் அடையக் கூடிய தீமைகளைப் பற்றியும் சொல்லிக் கொண்டு வருகிறேன்.

சிலபேர் தன்னை மறந்த நிலையில் வாசியை நிறுத்துவான். அப்படி நிறுத்திய காற்று உடம்பில் பல இடங்களில் தங்கியதால், உடம்பின் இயக்கம் அப்படியே நின்றுவிடும். அதனால் இறந்துபோவான்.

உடம்பிற்குள்ளே மூச்சுக்காற்றின் இயக்கம் மிக மென்மையாக இருக்கும், யாருக்கும் தெரியாது. அந்த இயக்கத்தைப் பற்றிய அறிவு நமக்கு வேண்டும். மலரினும் மென்மையாக நடக்கக் கூடிய இயக்கத்தை அறிந்தல்லவா செயல்பட வேண்டும். அந்த இயக்கத்தை அறியக் கூடிய அறிவும் மலரினும் மென்மையாக இருக்க வேண்டும். அப்படி இருந்தாலன்றி இந்தத் துறையை அறிய முடியாது.

**மயிர் முனையிற்பாதி மனத்தறி வுண்டேல்**
**அயிர்ப்புண்டங் காதி நிலை.**

**– ஔவைக்குறள் – முத்தி காண்டல் – குறள் எண் 158.**

அறிவு மென்மையிலும் மென்மை, மென்மையிலும் மென்மை என்கிற அளவிற்கு மென்மையாக வேண்டும்.

வாசி வசப்பட வேண்டுமென்று யோகப்பயிற்சி மேற்கொள்கின்ற மக்கள் எப்படி நடந்து கொள்ள வேண்டும்**?** அதற்குரிய கற்பம், உணவு பழக்கவழக்கங்கள், இடையில் வருகின்ற சிக்கல்கள் இவற்றை சுவடி மூலம் பார்த்து சரி செய்து கொள்ள வேண்டும். இப்படியில்லாமல் தன் இஷ்டப்படி சில நூல்களை படித்துவிட்டு அதன்படி பிராணாயாமம் செய்ததால் வருகின்ற தீமைகளைப் பற்றி பேசிக் கொண்டிருக்கிறோம்.

**சூலை வாய்வு அணுகி சுவாலையும் எழும்பிச் சுரமதால் இறந்தனர் கோடி –** வாசியை ரேசித்து நிறுத்தும் போது உடம்பில் உஷ்ணம் உண்டாகி மலச்சிக்கல் உண்டாகும். அதன் காரணமாக உடம்பில் துஷ்ட வாயு உற்பத்தியாகி ஒவ்வொரு மூட்டிலும், கணுவிற்கு கணுவும் வாயு தங்கும். அதை கணுச்சூலை என்பார்கள். அதன் காரணமாக காய்ச்சல் வரும்.

இந்த நிலையில் வாசி பழக்கத்தை கைவிட்டு மருத்துவம் மேற்கொள்ள வேண்டும். இனியாவது பிழைத்துக் கொள் என்று வாசிப்பழக்கத்தை கைவிட வேண்டுமென்று அவனிடம் சொல்ல வேண்டும்.

ஆனால் அவனுக்கு சொல்லிக் கொடுத்தவன், இப்படி இருக்கத்தான் செய்யும். வாசிப்பழக்கத்தை விடாது தொடர்ந்து செய் என்பான். துன்பம் வரத்தான் செய்யும், விடாதே பிடி என்பான். தொடர்ந்து வாசி பழக்கத்தை செய்ததால் அவன் இறந்து போனான்.

வாழ்வதற்காகத்தான் பிராணாயாமம் செய்ய வேண்டும், சாவதற்காக செய்யக் கூடாது. விஷயம் தெரிந்தவன் இப்படி செய்யாதே வேண்டாம் என்பான்.

நாங்கள் தவத்திற்காக உப்பில்லா உணவை உண்டு வருகிறோம். என்னை பார்த்தால் உப்பில்லா உணவை உண்டதுபோல் தெரியாது. ஏனென்றால் ஆசான் தயவு கொண்டல்லவா நாங்கள் உப்பில்லா உணவை மேற்கொண்டோம்.

உப்பில்லாமல் சாப்பிட்டால் உடல் சோர்ந்து இரத்தசோகை வந்து இறந்து போவான். பக்கத்தில் உள்ளவன் அறுசுவை உணவு உண்பதை இவன் பார்த்தால், இவனுக்கு எச்சில் ஊறும், கட்டுப்பாடாக இருக்க முடியாது. இந்த சுவையை ஆசான் தயவு இல்லாமல் ஒழிக்க முடியாது. நீ மற்றவர்களுக்காக உப்பில்லாமல் சாப்பிடவில்லை, உனக்காக சாப்பிடுகிறாய். அந்த வைராக்கியம் உனக்கு வேண்டும். வைராக்கியத்தை கொடுப்பதும் ஆசானே.

இப்பொழுது பேசுகின்ற கருத்துக்கள் எல்லாம் மகான் புலத்தியர் கற்பம் 300ல் உள்ளவையாகும்.

**ஊண உண்நாக்கை அண்ணாக்கையுள் தூக்கி உள்ளடங் கிணர்களுங் கோடி** – காற்றை ரேசித்து கண்டஸ்தானத்தில் நிறுத்திக் கொண்டு வெளிக்காற்றை புருவமத்தியில் செலுத்துவான். செலுத்துவது உண்ணாக்கையுள் அண்ணாக்கையா என்பார் ஞானிகள். அப்படி செலுத்த வேண்டியது உள்நாக்கா? அண்ணாக்கா? என்றால் இதுவெல்லாம் யோகிகளுக்கு பரிபாஷை. நம்மால் அறிந்து கொள்ள முடியாது. அதை இன்னொரு யோகிதான் அறிய முடியும். நூலைப் படிக்கும்போதே அதன் சாரம் எங்களுக்கு தெரியும். இவனை காத்து ரட்சிக்க வேண்டுமென்று கங்கணம் கட்டிக்கொண்டு ஆசான் சொன்னால்தான் இவனுக்கு புரியும்.

சொன்னதன் அர்த்தம் உள்காற்றையும் வெளிக்காற்றையும் செலுத்த வேண்டும் என்று சொல்லியிருக்கிறார். ஆனால் இவன் தவறாக புரிந்து கொண்டு அடி நாக்கை அறுத்து அறுத்து ஆற வைத்து, நாக்கை அண்ணாக்கில் செலுத்துவான். இவன் அண்ணாக்கில் செலுத்திய நாக்கை சில சமயங்களில் இவனால் எடுக்க முடியாது. நா உள்ளடங்கியதால் இவனால் சத்தம் போட முடியாமல் மூச்சுத்திணறி இறந்து விடுவான். யான் என்ற கர்வம் கொண்டு செய்ததால், இவன் இப்படித்தான் சாக வேண்டும்.

ஞானிகளை வணங்கி தாங்கள் அருளிய நூல்களின் சாரங்களை என்னால் படித்து அறிய முடியவில்லையே? எப்படி செயல்பட வேண்டுமென்று எனக்கு தெரியவில்லையே? நான் இந்தத் துறையில் முன்னேற ஆசைப்படுகின்றேன், என்னால் முடியவில்லையே? எனக்கு அருள் செய்யுங்கள் என்று கேட்டிருந்தால் ஆசான் உணர்த்தியிருப்பார்.

**உயர சாண்நீள முழுவதும் எழும்பி ஓங்கியே ஒடுங்கினோர் கோடி** – காற்றை தினமும் ஸ்தம்பிக்க, ஸ்தம்பிக்க, ஸ்தம்பிக்க இரத்தக் குழாய் முழுவதும் காற்று தங்கிவிடும். அப்படி காற்று இரத்தக்குழாயில் தங்கினால் உடம்பு இலேசாகி ஒரு அங்குல உயர எழும்பும். அவனுடைய சீடர்கள் ஆகா! நமது ஆசான் மிகப்பெரிய நிலையை அடைந்து விட்டார் என்று மகிழ்வார்கள். இந்த நிலை சிறிது மாறினாலும் அப்படியே இறந்து போவான். இதுபோன்று இறந்தவர்கள் கோடி என்கிறார். செத்துப் பிறக்கின்றவரை வணங்குகிறவர்களுக்கு இந்த நிலைமைதான் வரும்.

**செத்துப் பிறக்கின்ற தேவரைத் துதிப்போர்க்கு**
**முத்திதான் இல்லையடி குதம்பாய்**
**முத்திதான் இல்லையடி.**

**– மகான் குதம்பைச்சித்தர்.**

இறந்து பிறப்பவனை வணங்குவதால் உனக்கு என்ன பலன்?

மும்மலம் வென்ற முதல்வனாகிய ஆசானைத்தான் நாங்கள் வணங்குவோம். அய்யனே என்றால் அஞ்சேல் என்று அருளக் கூடிய தலைவனாக இருக்க வேண்டும். அப்பேர்ப்பட்ட தலைவனை அல்லவா நாங்கள் வணங்கி சித்தி பெற வேண்டும்.

ஆனால் இவன் கேட்க மாட்டான். அது அவரவர் வினைப்பயன். இவன் செய்த பாவத்தால் சுத்த மடையனை தினந்தினமும் வணங்குவான். அவன் சொன்னதையெல்லாம் கேட்பான். வாழ்நாள் முழுதும் இப்படியே வாழ்ந்து இறந்து போக வேண்டுமென்பது இவன் தலையெழுத்து. இவனைத் திருத்த முடியாது.

**பேண அதிசார பேதிவந்து அணுகிப் பிறவியும் இழந்தனர் கோடி** – பழைய உணவு வயிற்றில் இருக்கும்போது வாசிப்பயிற்சி செய்யக் கூடாது. ஆனால் வயிற்றில் பழைய உணவு இருப்பதை அவனால் அறிய முடியாது. காற்றை ஸ்தம்பித்து நிறுத்தும்போது உடம்பில் உஷ்ணம் ஏறும். அதனால் பசி இருப்பது போன்று தெரியும். ஆனால் அவனுக்கு அஜீரணக் கோளாறு இருக்கும். இதை அறியாது வாசியை கட்டுவான். அதன் காரணமாக கிராணி வந்துவிடும். உண்ட அன்னம் செரிமானம் ஆகாமல் பேதியாகி இறந்துவிடுவான். இப்படி இறந்தவர் கோடி என்கிறார்.

**பெருமையாய்க் கர்ப்ப சாதனை அறியாது பிராணனும் அழிந்து மாண்டனரே** – உள் கற்பம் என்றாலே அது ஆதி விந்துதான். உடம்பு சுத்தமானால் சுக்கிலம் சுத்தமாகும். அதுவே உன்னுடைய பிறவிப்பிணிக்கு மருந்து என்பதை அறிய வேண்டும். இந்த அறிவு எப்போது வந்ததோ, அன்றே நிறைவுடைய ஞானியாவான். இவையெல்லாம் உண்மைப் பொருளுணர்ந்த மக்கள் பேசுகின்ற கருத்து.

உள்கற்பத்தை உண்ண வேண்டுமென்றால் புறக்கற்பத்தைப் பற்றி துல்லியமாக அறிந்திருக்க வேண்டும். சத்தி சாரணை, வல்லாரை சூரணம், பசு நெய், பச்சரிசி, பால், பாசிப்பயறு இவையெல்லாம் புறக்கற்பங்கள். இந்த கற்பத்தின் துணை கொண்டு வெப்பத்தை அடக்கி, உடம்பில் உள்ள மாசை நீக்கி, உப்பில்லா உணவை சாப்பிட்டு வந்தால், அசுத்தமான உடம்பு காயசித்தி ஆகிவிடும்.

இந்த காயசித்தி முழுமைபெறும் மட்டும் மனைவியின் துணை இருக்க வேண்டும். இதற்கு மனைவி தடையாக இருக்க முடியாது. மனைவி இருந்தால்தான் இவன் சித்தி பெற முடியும். அவள் துணை கொண்டுதான் இந்த காரியத்தை சாதிக்க முடியும். மனைவியின் துணை கொண்டு உடம்பில் உள்ள அசுத்தத்தை நீக்குவான். அசுத்தத்தை நீக்குவதற்கு இந்த புறக்கற்பமும் வேண்டும், உடம்பில் உள்ள களிம்பை அறுக்க வேண்டும்.

**களிம்பறுத் தான்எங்கள் கண்ணுதல் நந்தி**
**களிம்பறுத் தான்அருட் கண்விழிப் பித்துக்**
**களிம்பணு காத கதிரொளி காட்டிப்**
**பளிங்கிற் பவளம் பதித்தான் பதியே.**

**– திருமந்திரம் – உபதேசம் – கவி எண் 114.**

உடம்பில் எவ்வளவு மாசு இருக்கிறதென்று உனக்கு தெரியாது.

**தானே யறியும் வினைகள் அழிந்தபின்**
**நானே யறிகிலன் நந்தி யறியுங்கொல்**
**ஊனே யுருகி யுணர்வை யுணர்ந்தபின்**
**தேனே யனையனந் தேவர் பிரானே.**

**– திருமந்திரம் – திருவருள் வைப்பு – கவி எண் 1796.**

உன்னை வஞ்சிக்கக் கூடிய, நச்சுத்தன்மையுள்ள ஊனை உருக்கி உணர்வை உணர்ந்தபின் **தேனே யனையன் நம் தேவர் பிரானே** என்கிறார் மகான் திருமூலதேவர். அவர்கள் நச்சுத்தன்மையுள்ள இந்த ஊனை உருக்குவார்கள்.

**கானுறு கோடி கடிகமழ் சந்தனம்**
**வானுற மாமல ரிட்டு வணங்கினும்**
**ஊனினை நீக்கி யுணர்பவர்க் கல்லது**
**தேனமர் பூங்கழல் சேரவொண் ணாதே.**

**– திருமந்திரம் – குருபூசை – கவி எண் 1848.**

இவனுக்கு எந்த அளவிற்கு உடம்பில் அசுத்தம் இருக்கிறது என்பதும் தெரியாது, எந்த அளவிற்கு ஊனை உருக்க வேண்டுமென்பதும் தெரியாது.

**பானினைந் தூட்டுந் தாயினுஞ் சாலப்**
**பரிந்துநீ பாவியே னுடைய**
**வூனினை யுருக்கி யுள்ளொளி பெருக்கி**
**யுலப்பிலா வானந்த மாய**
**தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த**
**செல்வமே சிவபெரு மானே**
**யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தே**
**னெங்கெழுந் தருளுவ தினியே.**

**– திருவாசகம் – பிடித்த பத்து – கவி எண் 9.**

மாணிக்கவாசகா என்று சொன்னால் எமன் நடுங்குவான். அப்பேர்ப்பட்ட மாமேதை மகான் மாணிக்கவாசகர்.

**யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்** – தொடர்ந்து பற்ற வேண்டும். சித்தி பெறுவதற்கு உள்ள பயணத்தில் தொடர்ந்து செல்ல வேண்டும். வாசியை சிக்கெனப் பிடித்தேன், எங்கெழுந்து அருளுவது இனியே என்கிறார். அப்படி பிடித்த காற்று வெளியே போகாது. அதைதான் அவர் சொன்னார்.

ஊனினை உருக்கினால் அன்றி ஒருநாளும் இரகசியத்தை அறிய முடியாது.

**களிம்பறுத் தான்அருட் கண்விழிப் பித்து** – தலைவன் உன்னைச் சார்ந்து உனக்கு இந்த தத்துவத்தை உணர்த்தினார்.

**களிம்பணு காத கதிரொளி காட்டிப் பளிங்கிற் பவளம் பதித்தான் பதியே** – சுத்தத்திலே சுத்த தேகிதான். பளிங்கு என்பது சுத்தமான ஒன்று. அதற்குள்ளே பவளத்தை பதித்தான் என்று சொல்கிறார். அசுத்தம் நீங்கியதற்கு சொன்ன விளக்கம் அது. உள்ளம் உருக பூசித்தால், தலைவன் நம்மோடு சார்ந்திருந்து உணர்த்துவான்.

புறஉடம்பு களிம்பற்று போவதற்கு விளக்கம் சொல்கிறேன். யோகி உள்ளம் உருக பூசை செய்வான். பூசை செய்யும்போதே இந்த உடம்பு செம்பு போன்றது என்பது அவனுக்கு தெரியும். செம்பு என்றாலே அதில் களிம்பு உண்டு. மனிதனுக்கு உடம்பே களிம்புதான். களிம்பற்ற ஒன்று தங்கம்.

**ஆமேவு பால்நீர் பிரிக்கின்ற அன்னம்போல்**
**தாமே தனிமன்றில் தன்னந் தனிநித்தந்**
**தீமேவு பலகர ணங்களுள் உற்றன**
**தாமேழ் பிறப்பெரி சார்ந்தவித் தாமே.**

**– திருமந்திரம் – உபதேசம் – கவி எண் 120.**

**ஆமேவு பால்நீர் பிரிக்கின்ற அன்னம்போல்** – கிண்ணத்திலே பாலையும் தண்ணீரையும் கலந்து அன்னப்பறவையிடம் வைத்தால், அது பாலை மட்டும் பருகும். தண்ணீரையும் பாலையும் பிரித்து அருந்தும் ஆற்றல் இவ்வுலகில் எங்கும் இல்லை. அதுதான் அன்னப் பறவையின் தன்மை. இந்த ஆற்றலை, திண்மையை, உறுதியை, சிறப்பை ஆசான்தான் நமக்கு தர வேண்டும். அன்னப்பறவை பாலை மட்டும் பிரித்து அருந்துவது போன்று ஆசான்தான் தர வேண்டும்.

**அவித்தவித்து முளையாதே தாண்ட வக்கோனே – பத்தி**
**அற்றவர் கதியடையர் தாண்ட வக்கோனே.**

**– மகான் இடைக்காட்டுச்சித்தர் – கவி எண் 21.**

**அவித்தவித்து முளையாதே தாண்ட வக்கோனே** – வேக வைத்த வித்து எந்த காலத்திலும் முளைக்காது.

**பத்தி அற்றவர் கதியடையர் தாண்ட வக்கோனே** – வேக வைத்த வித்து முளைக்காதது போல், பக்தியில்லாதவர்க்கு ஞானம் இல்லை.

ஆசானை வணங்கி பூஜை செய்தால், நம் உடம்பை சார்ந்திருந்து, நம் உடம்பில் உள்ள அசுத்தங்களை நீக்குவார்.

**தாமே தனிமன்றில் தன்னந் தனிநித்தம்** – மன்று என்பது மேடை. உடம்பில் உள்ள அசுத்தம் மல, ஜல, சுக்கிலமாக வெளியேறும். அசுத்த சுக்கிலம் வெளியேறத்தான் செய்யும். சுத்த உடம்பானதற்கு பிறகு அது நின்றுவிடும். தலைவன் நம்மை சார்ந்தாலன்றி இது முடியாது. எந்த அளவிற்கு உடம்பில் அசுத்தம் இருக்கிறது என்பது இவனுக்கு தெரியாது.

**தீமேவு பலகர ணங்களுள் உற்றன** – முன் செய்த பாவத்தின் காரணமாக, பொறிபுலன்கள் நெறி கடந்து நமக்கு வஞ்சனை செய்ய ஆரம்பிக்கும். கருவிகரணங்களெல்லாம் நமக்கு விரோதமாக தீய நெறியில் செல்லும்.

**சென்ற இடத்தால் செலவிடா தீதுஒரீஇ**
**நன்றின்பால் உய்ப்பது அறிவு.**

**– திருக்குறள் – அறிவு உடைமை – குறள் எண் 422.**

இந்தக் குறளில் ஆசான் திருவள்ளுவர் நமக்கு அறிவுரை கூறுகிறார்.

**அவாஎன்ப எல்லா உயிர்க்கும்எஞ் ஞான்றும்**
**தவாஅப் பிறப்புஈனும் வித்து.**

**– திருக்குறள் – அவா அறுத்தல் – குறள் எண் 361.**

**பிறப்பெரி சார்ந்தவித் தாமே** என்ற கருத்தை இங்கே **தவாஅப் பிறப்பீனும் வித்து** என்கிறார் ஆசான் திருவள்ளுவர். விடாது எப்பொழுதும் பிறவித் துன்பத்தை உண்டாக்கக் கூடிய வித்து என்பது அவா தான் என்று ஆசான் திருவள்ளுவர் சொல்கிறார். திருக்குறள் என்னும் பொதுநூலில் ஞானம் இருக்கிறது. ஆகவே திருக்குறளும் ஞான நூலே. யோகி, ஆசை என்கிற வித்தை வறுத்துவிடுவான். திருக்குறளிலே சரியை, கிரியை, யோகம் என்ற மூன்றும் இருக்கும். இதில் ஞானமும் தங்கியிருக்கும்.

**மற்றும் தொடர்ப்பாடு எவன்கொல் பிறப்புஅறுக்கல்**
**உற்றார்க்கு உடம்பும் மிகை.**

**– திருக்குறள் – துறவு – குறள் எண் 345.**

இது யோகிகளுக்கு சொன்ன கருத்து. மற்றும் தொடர்பு ஏன் வைத்துக் கொள்கிறாய். தொடர்பை நீக்கிக் கொள் என்கிறார். உலக நடைக்காக மகான் திருவள்ளுவர் சொல்லவில்லை. உடம்பில் உள்ள மாசு நீங்கிவிட்டதே, ஏன் இன்னும் தொடர்பு வைத்துக் கொண்டிருக்கிறாய் என்பார்.

**தாமேழ் பிறப்பெரி சார்ந்தவித் தாமே** – கருவிகரணங்கள் தீயநெறியில் செல்லாது நன்னெறியில் செல்லுவதற்குரிய அறிவை அவர் தருகிறார். அந்த

அறிவை தந்து பிறவிக்கு காரணமாகிய ஆசை என்ற வித்தை வறுத்து விடுவான், வறுத்த விதை முளைக்காது. இந்தக் கருத்துகளையெல்லாம் ஞானிகளை வணங்கி அவர்களுடைய ஆசியைப் பெற்று தெரிந்து கொள்ளலாம்.

**கண்டுபார் பூரணத்திற் கருவுதன்னைக்**
**கலந்துமனம் நெகிழாம லிருத்திப்பாரு**
**உண்டுபா ரமுதத்தை யிரக்கியுண்டால்**
**உத்தமனே தேகமது கற்றூணாகும்**
**விண்டுபார் நாசிநுனி மையமீதில்**
**வீற்றிருப்பாள் வாலையடா புரியஷ்டத்துள்**
**பண்டுபா ராதியந்தம் நிறைந்தசோதி**
**பாலனென்னுங் குமரனைநீ வணங்குவாயே.**

**– மகான் சட்டமுனி சூத்திரம் – கவி எண் 4.**

**வணங்கினாற் சகலசித்துங் கைக்குள்ளாச்சு**
**மைந்தனே அமுதமது சிந்துஞ்சிந்தும்**
**இணங்கினால் நீயவனு மொன்றேயாகும்**
**யென்மகனே நினைத்ததெல்லாங் கூடும்பாரு**
**புணங்கினால் மனம்நினைக்கக் கூடாதப்பா**
**புத்தியது அறிவுக்குட் புகுந்துதானால்**
**அணங்கினா லாத்மாவும் ஒன்றாய்ப்போகும்**
**அப்பனே அதிசயத்தை யரைகிறேனே.**

**– மகான் சட்டமுனி சூத்திரம் – கவி எண் 5.**

ஆசான் சுப்பிரமணியர், மகான் அகத்தியர் மற்றும் அவர் வழி வந்த ஞானிகள் அனைவரும் ஒன்றுதான். இவர்கள் அனைவரும் இடகலை பிங்கலையை ரேசித்து புருவமத்தியில் ஒடுக்கியவர்கள். ஆசான் சுப்பிரமணியர் தயவால்தான் வாசி நடத்திக் கொடுக்கப்பட்டு ஞானிகள் அனைவரும் சித்தி பெற்றிருக்கிறார்கள். வணங்கினால் ஞானிகளைத்தான் வணங்க வேண்டும்.

**பாலனென்னுங் குமரனைநீ வணங்குவாயே வணங்கினாற் சகலசித்துங் கைக்குள்ளாச்சு** – முருகா என்று சொன்னாலே போதும், அனைத்தும் கைகூடும்.

**வணங்கினாற் சகலசித்துங் கைக்குள்ளாச்சு** – ஆசான் சுப்பிரமணியரை வணங்கினால் சகலசித்தும் கைக்குள்ளாகும், எல்லா காரியங்களும் சித்திக்கும்.

நீ இந்தத் துறையில் முன்னேற ஆசைப்பட்டால், மனித பிறவியை உயர்த்திக் கொள்ள ஆசைப்பட்டால், நூறு கோடி ஆண்டுகள் ஒரு நொடிப்பொழுதாக வாழ ஆசைப்பட்டால், நான் அறிமுகப்படுத்துகின்ற ஆசானை நீ வணங்க வேண்டும்,

நிச்சயமாக உனக்கு வாய்ப்பு கிடைக்கும். தன் அறிவை நம்பி, நூல்களை படித்துவிட்டு உன் விருப்பத்துக்கு வாசிப்பயிற்சி செய்தால் அநியாயமாக நீ இறந்துபோவாய்.

பிராணாயாமம் செய்வதற்கு முன், நல்வினையை பெருக்கிக் கொண்டு ஞானிகளை பூஜை செய்து வர வேண்டும். சாட்சாத் பரப்பிரம்ம சொரூபியாகிய ஆசான் சுப்பிரமணியரை பூஜை செய்து உன் வாழ்க்கையை உயர்த்திக் கொள்ள வேண்டும்.

பக்திநெறி, யோகநெறி அதன் காரணமாக ஏற்படுகின்ற ஞானவாழ்வு, ஞானநெறி, ஞான வழிமுறைகளைப் பற்றி தொடர்ந்து பேசி வருகின்றோம். மகான் அகத்தீசர் தயவால்தான் எத்தனையோ பஞ்சமாபாவிகள் சித்தி பெற்றிருக்கிறார்கள் என்பதை நீங்களெல்லாம் அறிந்து கொள்ள வேண்டும்.

**காப்பான கருவூரார் போகநாதர்**
**கருணையுள்ள அகத்தீசர் சட்டைநாதர்**
**மூப்பான கொங்கணரும் பிரம்மசித்தர்**
**முக்கியமாய் மச்சமுனி நந்திதேவர்**
**கோப்பான கோரக்கர் பதஞ்சலியார்**
**கூர்மையுள்ள இடைக்காடர் சண்டிகேசர்**
**வாப்பான வாதத்திற்கு ஆதியான**
**வாசமுனி கமலமுனி காப்புத்தானே.**

**– ரோமரிஷி பூஜாவிதி 7ல் கவி எண் 2.**

இந்த பாடலை அருளியவர் மகான் ரோமரிஷி. இவரும் வாசி வசப்பட்டவரே. மருத்துவர்கள் இனி குழந்தையில்லை என்று சொன்ன பெண்ணுக்கு, இவர் அருள் செய்தால் குழந்தை பாக்கியத்தை பெறுவாள்.

**காப்பான கருவூரார்** – மகான் கருவூர் முனிவர் மாபெரும் யோகி என்பது உங்களுக்குத் தெரியும். தஞ்சையில் பிரகதீஸ்வரர் ஆலயத்தை ஸ்தாபித்த மாபெரும் யோகி மகான் கருவூர் முனிவர். மகான் கருவூரார் காளஹஸ்தியிலும், தஞ்சையிலும் அடக்கம் ஆகியுள்ளார். காக்கக் கூடிய கருணை உள்ளவர் மகான் கருவூர்தேவர் என்று சொல்கிறார்.

**காப்பான கருவூரார் போகநாதர்** – மகான் போகநாதர் என்று சொல்லப்பட்ட மாபெரும் யோகிக்கு பழனியில் சமாதி உள்ளது. சமாதி என்றால் அவரை உள்ளே வைத்து சமாதி செய்துள்ளார்கள் என்று எண்ணாதீர்கள். இடகலையும், பிங்கலையும் சேர்த்து சமாதி செய்த மக்கள். அப்பேர்ப்பட்ட மகான் போகநாதர் மாபெரும் யோகி.

ஆனால் இவன் சமாதி ஆகிறேன் என்று குழியில் வைத்து மூடிவிடுங்கள் என்பான். அநியாயமாக இறந்து போவான். இது சமாதி அல்ல.

மகான் புஜண்டமகரிஷி பெயரை சொன்னால், எமன் அஞ்சுவான், எமதூதர்களெல்லாம் அஞ்சி நடுங்குவார்கள். ஆசான் அகத்தீசர்தான் மகான் புஜண்டமகரிஷிக்கு வாசி நடத்திக் கொடுத்தார். பெருமைக்குரிய மகான் புலத்தீசருக்கு வாசி நடத்திக் கொடுத்தது ஆசான் அகத்தீசர்.

நூற்றி பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னே சித்தி பெற்ற மகான் இராமலிங்கசுவாமிகளுக்கு வாசி நடத்திக் கொடுத்தது ஆசான் அகத்தீசர்தான். ஆசான் சுப்பிரமணியர் வாசி நடத்திக் கொடுத்தாலும், மகான் அகத்தியர் வாசி நடத்திக் கொடுத்தாலும் ஒன்றுதான்.

**என்னவே நீயழைக்க எனக்குமுன்னே**
**எதிரேறி முன்வருவாள் ஆத்தாள்வாலை**
**சொன்னபேர் அறிந்துநன்றாய் அழைத்துப்பாரு**
**சூட்சமிதை உனக்காகச் சொன்னோமப்பா**
**இன்னபேர் இன்னகுறி யெண்ணவேண்டாம்**
**ஏகமாய் அறிந்திருப்போம் அப்போநாமும்**
**முன்னமே அழைக்கையிலே மூமூவென்றால்**
**முத்திதரும் வாலைபதஞ் சித்தியாமே.**

**– திருமூலர் ஞானம் 84–ல் கவி எண் 82.**

ஒருமுறை திருமூலதேவா என்று அழைத்துப் பார், எனக்கு முன்னே ஆத்தாள் என்று சொல்லப்பட்ட தாய் வருவாள். உலகத்திற்கெல்லாம் தாயாகிய ஆசான் சுப்பிரமணியர் நம்மோடு சார்ந்திருந்து அமிழ்தபானத்தை ஊட்டக் கூடிய தகைமை உள்ளவர். எங்கெல்லாம் தாய் என்று சொல்கிறானோ, ஆதிபராசக்தி என்று சொல்கிறானோ அங்கெல்லாம் ஆசான் சுப்பிரமணியர் என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.

ஆசான் சுப்பிரமணியர் உலகத்திற்கு தாய். வாலைதேவி என்று சொல்வதும் ஆசான் சுப்பிரமணியரைதான். ஆசான் சுப்பிரமணியர்தான் அன்பர்களுக்கு தாயாகவும், வாலைதேவியாகவும் இருக்கிறார். அசுரர்களை வதைக்கும்போது காளியாக மாறுவாள். சுப்பிரமணியம் என்று சொல்லப்பட்ட சக்தி தாயாக மாறுவாள். அன்பர்களை எதிர்க்கக் கூடிய அசுரர்களை ஆசான் சுப்பிரமணியர் அழித்து விடுவார். அன்பர்களை எதிர்க்கக் கூடியவன் எத்தகைய ஆற்றல் உள்ளவனாக இருந்தாலும் சரி, அவனை மகான் சுப்பிரமணியர் அழித்து விடுவார்.

ஆசான் சுப்பிரமணியர் பாதத்தைப் பற்றுகின்ற மக்களுக்கு பகை இருக்க முடியாது.

**சொன்னபேர் அறிந்துநன்றாய் அழைத்துப்பாரு**
**சூட்சமிதை உனக்காகச் சொன்னோமப்பா.**

திருமூலதேவா என்று அழைத்துப் பார் எனக்கு முன்னே ஆசான் சுப்பிரமணியர் என்று சொல்லப்பட்ட தாய் வருவாள். உன்னோடு சார்ந்திருந்து அமிழ்தபானத்தை ஊட்டுவாள்.

**இன்னபேர் இன்னகுறி யெண்ணவேண்டாம்**
**ஏகமாய் அறிந்திருப்போம் அப்போநாமும்**

திருமூலதேவர் என்று சொல்லப்பட்ட என்னை அழைத்தாலும் சரி, மகான் நந்தீசரை அழைத்தாலும் சரி, மகான் சட்டைமுனிவர், மகான் போகநாதர், மகான் கருவூர் முனிவர், மகான் இடைக்காடர், மகான் பாம்பாட்டிசித்தர், மகான் கடுவெளிச்சித்தர், மகான் ரோமரிஷியை அழைத்தாலும் சரி எல்லோரும் ஒன்றுதான். இன்னபேர் இன்னகுறி யெண்ண வேண்டாம் என்கிறார்.

எல்லா ஞானிகளும் ஒரே தன்மையுள்ளவர்கள் என்பதை என்று நீ அறிகிறாயோ அன்றுதான் நீ தெளிவான அறிவைப் பெற்றிருக்கிறாய் என்று பொருள். இந்த அறிவுதான் உனக்கு சிறப்பறிவு.

திருமூலதேவா என்று சொன்னாலும், கடுவெளிச்சித்தர் என்றாலும், பட்டினத்துதேவா என்று சொன்னாலும், அருணகிரிநாதா என்றாலும் எங்கள் காதில் விழும். நாங்கள் அத்தனை பேரும் ஒன்று. ஞானிகள் அனைவருக்கும் ஆசி கொடுத்து வாசி நடத்திக் கொடுத்தவர் மகான் அகத்தீசர். அவரை வணங்கினால் நமக்கு சகலமும் சித்திக்கும்.

இவ்வுலகில் உள்ள ஆன்மீகவாதிகள் நடுநிலை என்று சொல்லப்பட்ட புருவமத்தியை அறியாது, ஆன்ம லாபத்தை பெற முடியாமல் வீணாக போகிறார்கள்.

சிவபெருமான் யாரென்று கேட்டான்? திருமணம் என்றால் என்னவென்று கேட்டான்? இடகலை என்று சொல்லப்பட்ட சக்தியும், பிங்கலை என்று சொல்லப்பட்ட சிவனும் எப்பொழுது ஒன்றுபடுகிறதோ அப்பொழுது திருமணம் நடைபெறுகிறது. அன்றுதான் அமாவாசை. அந்த தேகம் சித்தி பெற்றால் பௌர்ணமி. அதை பூரணம் என்று சொல்வார்கள். இது யோகிகளுக்கு உள்ள அமாவாசை.

சிவபெருமானுக்கு திருமணம் நடந்ததாம். இடகலையும் பிங்கலையும் ஒன்று சேர்த்து விட்டார். ஆசான் அகத்தீசர் பெருமையை சொல்ல வேண்டும் என்பதற்காக இப்படி சொல்வார்கள். பொதிகை மலையிலிருந்து இமயமலைக்கு ஆசான் அகத்தீசர் புறப்பட்டாராம். இமயமலையை நோக்கி செல்லும்போது இந்த பூமி சற்று சாய்ந்ததாம். இப்படி சாயும்போது அங்கிருந்த பிரம்மா, விஷ்ணு, ருத்திரர் மற்றும் எல்லா தேவர்களும் இருக்கிறார்கள். முப்பத்து முக்கோடி தேவர்களும், நாற்பத்து எண்ணாயிரம் ரிஷிமார்களும் இன்னும் அளவிலாத தேவதூதுவர்களும் திருமணத்தில் இருக்கிறார்கள். ஆசான் அகத்தீசர் உயரம் குறைவாக இருப்பார்.

**காப்பான கருவூரார் போகநாதர் கருணையுள்ள அகத்தீசர்** – அகத்தீசா என்றால் அந்த விநாடியே வந்து அருள் செய்யக்கூடிய ஆற்றல் உள்ளவர். ஆசான் அகத்தீசர் நம் மீது கருணை கொண்டு அளவில்லாத நூல்களை அருளியுள்ளார்கள்.

ஆசான் அகத்தீசர் இமயமலை நோக்கி வரும்போது பூமி சற்று சாய்ந்ததாம், அப்போது சிவபெருமான் அப்படியே நில் என்றாராம். அப்போது விநாயகப்பெருமான் கேட்டார், ஆசான் சுப்பிரமணியர் கேட்டார், பிரம்மா விஷ்ணு கேட்டார்கள். என்ன காரணம் இப்படி சாய்ந்துள்ளது என்று கேட்டார்களாம். சற்று சாயவில்லை, முற்றும் சாயப் போகிறது. அவர் வந்தால் முற்றும் சாய்ந்துவிடும் என்றாராம். ஆசான் அகத்தீசர் பெருமையை இப்படி நிலைநாட்டுகிறார்கள். ஆசான் அகத்தீசர் ஏழுகடலையும் குடித்து ஏப்பம் விடுவார்.

**ஏழுகடலையும் குடித்து ஏப்பம் விடுவோம்**
**இந்திரனார் உலகத்தை இங்கே காட்டுவோம்.**

என்று சித்தர்களின் வல்லபத்தைப் பற்றி கூறுவார்கள். ஏழுகடலையும் குடித்து ஏப்பம் விடக்கூடிய ஆற்றல் பொருந்தியவர்கள் மகான்கள்.

ஆசான் அகத்தீசர் பொதிகை மலையிலிருந்து, இமயமலையை நோக்கி பயணம் செய்யும்போது, பூமி சற்று சாய்ந்தது. சிவபெருமான் அங்கேயே நில் என்று ஆசான் அகத்தீசரை பார்த்து சொன்னாராம். அவர் மீண்டும் பொதிகை மலைக்கே வந்துவிட்டார். அப்போதுதான் பூமி சமநிலைக்கு வந்தது.

நடுநிலை என்று சொல்லப்பட்ட புருவமத்தியை அறியாதிருக்கிறான். மக்களுக்கு நடுநிலை என்று சொல்லப்பட்ட புருவமத்தியை அறியச் செய்து, அந்த அறிவை மக்களுக்கு நீ ஊட்டு என்று சொன்னாராம்.

**நடுவுநில் லாதிவ் வுலகஞ் சரிந்து**
**கெடுகின்ற தெம்பெரு மானென்ன ஈசன்**
**நடுவுள அங்கி அகத்திய நீபோய்**
**முடுகிய வையத்து முன்னிரென் றானே.**

**– திருமந்திரம் – அகத்தியம் – கவி எண் 337.**

**அங்கி உதயம் வளர்க்கும் அகத்தியன்**
**அங்கி உதயஞ்செய் மேல்பா லவனொடு**
**மங்கி உதயஞ்செய் வடபால் தவமுனி**
**எங்கும் வளங்கொள் இலங்கொளி தானே.**

**– திருமந்திரம் – அகத்தியம் – கவி எண் 338.**

**நடுநிலை இல்லாது இவ்வுலகம் சரிந்து** – ஒருபக்கம் சந்திரகலை, ஒருபக்கம் சூரியகலை இரண்டிலுமே இருந்திருக்கிறான். நடுநிலை என்று

சொல்லப்பட்ட சுழிமுனை இரகசியத்தை அவன் அறியவில்லை. இடகலை பிங்கலையை ரேசித்து சமமாக புருவமத்தியில் செலுத்த தெரியவில்லை.

**நடுவு இல்லாது இவ்வுலகம் சரிந்து** – சரிவு என்பது நிலைதடுமாறுதல். அந்த இலக்கை அடைய முடியவில்லை.

**இவ்வுலகம் சரிந்து கெடுகின்ற** – இவ்வுலகம் கெட்டுவிடும்.

**நடுவுள அங்கி அகத்திய நீபோய்** – அக்கினி என்று சொல்லப்பட்ட மகான் அகத்தீசர் பாதத்தைப் பற்றினாலே, அக்கினியை எப்படி எழுப்புவது என்பதைப் பற்றி அறிய முடியும்.

**முடுகிய வையத்து முன்னி ரென்றானே** – விரைவாக நீ சென்று நடுவு நிலைமை என்கிற புருவமத்தி இரகசியத்தை சொல்லி அக்கினியை நீ வளர்க்க வேண்டும் என்கிறார்.

உடம்பிற்குள்ளே பசித்தீ, கோபத்தீ, காமத்தீ என்கிற மூன்று வகையான அக்கினி இருக்கிறது. மிகுதியாக கோபம் வரும்போது, தடுமாற்றம் ஏற்பட்டு, நாடிநரம்புகளை முறுக்கேறி உடம்பில் உஷ்ணம் உண்டாகும்.

**முடுகிய வையத்து முன்னி ரென்றானே** – விரைவாக இவ்வுலகத்திற்கு சென்று உலகை முன்னேற்று என்று சுட்டிக்காட்டினார். அதனால்தான் ஆசான் அகத்தீசர் திருநாமம் கொண்ட சங்கத்தை அமைத்திருக்கிறோம். அவருடைய பார்வை பட்டாலே போதும். ஆசான் அகத்தீசர் மாபெரும் யோகி, அளவிட முடியாத ஆற்றல் பொருந்தியவர், கருணைக்கடல். அவரை சிந்தித்தாலே பல நன்மைகள் உண்டாகும்.

**குளத்திலே கிடக்கும் ஆமை குளக்கரை முட்டையிட்டுக்**
**குளத்துநீர்க் குள்ளிருந்து குறிப்புடன் நினைக்கும்போது**
**குளத்திலே புதைத்த முட்டை கருவுரு வானாற் போலுன்**
**உளத்திலே நாகைநாதர் உருவறிந்துணர்வாய் நெஞ்சே.**

**– மகான் கணபதிதாசர் – நெஞ்சறி விளக்கம் – கவி எண் 2.**

அது கடலில் வாழும் ஆமையாக இருந்தாலும் சரி, குளத்திலே வாழும் ஆமையாக இருந்தாலும் சரி, ஆமை கரையிலே வந்து முட்டையிடும்.

**கடலிலே திரியுமாமை கரையிலேறி முட்டையிட்டுக்**
**கடலிலே திரிந்தபோது ரூபமான வாறுபோல்**
**மடலுளே யிருக்குமெங்கள் மணியரங்க சோதியை**
**உடலுளே நினைந்துநல்ல வுண்மையான துண்மையே.**

**– மகான் சிவவாக்கியர் – கவி எண் 99.**

கடலில் உள்ள ஆமை கடற்கரைக்கு வந்து குழி பறித்து அதில் முட்டையிட்டு விட்டு கடலிற்குள் பல ஆயிரக்கணக்கான மைல் தூரத்திற்கு

சென்றுவிடும். ஆயிரக்கணக்கான மைலுக்கு அப்பால் கடலில் இருக்கும் ஆமை, கரையிலிருக்கும் முட்டையை நினைத்தால், முட்டை ரூபமாகும் என்று ஆசான் சிவவாக்கியர் சொல்கிறார்.

**குளத்திலே கிடக்கும் ஆமை குளக்கரை முட்டையிட்டு குளத்துநீர்க் குள்ளிருந்து குறிப்புடன் நினைக்கும்போது** – குளத்தில் உள்ள ஆமை கரையில் முட்டையிட்டுவிட்டு, குளத்திற்குள் சென்றுவிடும். ஆமை குளத்து நீர்க்குள்ளே இருந்து, அந்த முட்டையை குறிப்புடன் நினைக்கும்போதே, அந்த முட்டை ரூபமாகும்.

ஒரு ஆமைக்கே இப்படிப்பட்ட ஆற்றல் இருக்கிறது.

கடலில் உள்ள ஆமை பல ஆயிரக்கணக்கான மைலுக்கு அப்பால் இருந்து, தான் இட்ட முட்டையை நினைத்தால், அந்த முட்டை ரூபமாவது போல், அங்கியை வளர்க்கக் கூடிய ஆசான் அகத்தீசரை நாம் நினைத்தால், ஆசான் அகத்தீசர் அக்கணமே நமக்கு அருள் செய்வார்.

**நினைக்கின் நினைக்கு நினைப்பவர் தம்மைச்**
**சுனைக்குள் விளைமலர்ச் சோதியி னானைத்**
**தினைப்பிளந் தன்ன சிறுமைய ரேனுங்**
**கனத்த மனத்தடைந் தாலுயர்ந் தாரே.**

**– திருமந்திரம் – ஞானகுரு தரிசனம் – கவி எண் 2667.**

ஆசான் திருமூலதேவர் சிதம்பரத்திலும், திருவாடுதுறையிலும் அடக்கம். ஆசான் திருமூலர் அடக்கமாகும் முன், அவருடன் இருந்த அன்பர்களெல்லாம், ஐயனே எந்த சந்தேகம் கேட்டாலும் தடையின்றி சொன்னீர்களே, நீர் அடக்கமாகிவிட்டால் எங்களுக்கு கதி என்ன? என்று கேட்டார்களாம். அஞ்சேல் மகனே என்று சொன்னார். நீ எந்த விநாடி என்னை நினைத்தாலும் நான் வருவேன் என்றார்.

**நினைக்கின் நினைக்கு நினைப்பவர் தம்மை** – நீ எந்த விநாடி என்னை நினைக்கிறாயோ, அந்த விநாடி நானும் உன்னை நினைப்பேன், உனக்கு அருள் செய்வேன் என்கிறார்.

**சுனைக்குள் விளைமலர்ச் சோதியி னானை** – தடாகத்திலே தோன்றிய தாமரை மலர் மீது இருக்கக்கூடிய பிரம்மன் மீது ஆணையாக சொல்கிறேன், நீ எந்த விநாடி நினைத்தாயோ, அந்த விநாடி நான் வருவேன் என்கிறார்.

உனக்கு உலக அறிவு மிகுதியாக இருக்கிறது. அதுவெல்லாம் அநித்தியம். உலகத்தில் உள்ள விஷயங்களை துல்லியமாக ஆராய்ந்து அறிந்து வைத்திருப்பான். அதனால் பேரும் புகழும் கிடைக்கும். ஆனால் அதெல்லாம் அநித்தியம் என்பதை உணர வேண்டும்.

**தினைப்பிளந் தன்ன சிறுமைய ரேனும்** – தினை என்பது சிறு தானியம். அதை இரண்டாக பிளந்தால், எந்த அளவிற்கு இருக்குமோ, அந்த அளவிற்கு ஆன்மீக அறிவு உனக்கு இருந்தாலே போதும். அந்த அளவிற்கு ஆன்மீகத்தைப் பற்றி அறிந்தாலே போதும். ஆன்மீக அறிவு உனக்கு சிறிது இருந்தால் போதும்.

**கனத்த மனத்தடைந் தாலுயர்ந் தாரே** – எடுத்துக் கொண்ட இலட்சியத்தை உறுதியாக பிடித்துக் கொள். என்னுடைய திருவடியை உறுதியாக நீ பற்றிக் கொண்டால் போதும், உனக்கு ஆன்மீக அறிவு சிறிது இருந்தாலே நீ முன்னேற முடியும். மிகப்பெரிய கல்வியறிவு உள்ள மக்களெல்லாம் செல்ல முடியாத இடத்திற்கு நீ சென்றுவிடுவாய். அப்போது நீ நினைத்தாலே போதும். ஆமை நினைத்தால், தான் இட்ட முட்டை ரூபமாவது போல, ஆசானை நாம் நினைத்தாலே போதும், அஞ்சேல் மகனே என்று அருள் செய்வார்.

**பச்சைமண் பதுப்பிலே பழுப்பதிந்த வேட்டுவன்**
**நித்தமும் நினைத்திட நினைந்தவண்ண மாயிடும்**
**பச்சைமண் ணிடிந்துபோய் பரந்ததும்பி யாயிடும்**
**பித்தர்கா ளறிந்துகொள்க பிரானிருந்த கோலமே.**

**– மகான் சிவவாக்கியர் – கவி எண் 107.**

குளவி தனக்கு விருப்பமான புழுவை கொண்டு வந்து கூட்டிலே அடைக்கும். ஒருவிதமான ஓசை எழுப்பிக் கொண்டு இந்தப் புழு குளவியாக வேண்டுமென்று முயற்சி செய்யும். ஆமை சிந்தனையால் தன் முட்டையை தன் ரூபமாக்கும். குளவி முயற்சியால் அந்தப் புழுவை தன் இனமாக்கும்.

தான் இட்ட முட்டையை மீன் உற்று நோக்கினால், அந்த முட்டை மீன் குஞ்சாகும். இதுபோன்று ஆசான் பார்வை நம்மீது பட்டாலே அது தீட்சைதான். ஆசானை நினைத்தாலே சிறப்பறிவு. ஆசானை அடைய வேண்டுமென்று முயற்சி செய்தாலே சிறப்பறிவு.

ஆமை நினைத்தால், குளவி முயற்சித்தால், மீன் பார்த்தால் தன் இனமாவது போல, ஆசானை அடைய சிறப்பறிவு சிறிது இருந்தாலே போதும். அவர் பார்வையால் நாம் நிறைய பயன்களை அடையலாம்.

நெல் நன்றாக விளையக் கூடிய வயற்பகுதியிலே எலியின் தொந்தரவு நிறைய இருக்கும். நூறு டன் விளையக்கூடிய பகுதியிலே, எலி பத்து டன் நெல்லை அழித்துவிடும். இப்படி நெல் உற்பத்தியை பாதிப்பதாலே, எலியை பிடிப்பார்கள். எலி இருக்கும் வயற்காட்டில் பாம்பும் இருக்கும்.

எலி பிடிக்க செல்பவர்கள் வயற்காட்டிற்கு சென்று எலியை பிடித்து கொன்று இடுப்பைச் சுற்றி கட்டிக் கொள்வார்கள். எலியை பிடிக்க எலி வளையை தோண்டி எலியை பிடிக்க கையை விட்டான், அதிலிருந்த கருநாகப் பாம்பு

அவனைக் கடித்துவிட்டது. அவன் இருந்த வயற்காட்டிற்கும் ஊருக்கும் இரண்டு கிலோமீட்டர் இருக்கும். வேகவேகமாக ஊருக்குள் செல்வதற்காக நடந்தான். ஆனால் கொஞ்சதூரம் சென்றவுடன் விஷம் உச்சிக்கு ஏறி மயக்க நிலைக்கு சென்றுவிட்டான். அவனுடைய இடுப்பைச் சுற்றி கட்டியிருந்த எலியை வானில் பறக்கும் கருடன் பார்த்தது. அந்தப் பார்வை அவன் மீது பட்டதும், அந்த கருநாகப் பாம்பின் விஷம் நீங்கிவிட்டது. இதை ஆசான் திருமூலதேவர் சுட்டிக்காட்டுகிறார்.

**கருடன் உருவங் கருதும் அளவிற்**
**பருவிடந் தீர்ந்து பயங்கெடு மாபோல்**
**குருவின் உருவங் குறித்தஅப் போதே**
**திரிமலந் தீர்ந்து சிவனவ னாமே.**

**– திருமந்திரம் – ஞானகுரு தரிசனம் – கவி எண் 2659.**

**கருடன் உருவங் கருதும் அளவிற்**
**பருவிடந் தீர்ந்து பயங்கெடு மாபோல்**

பரு என்பதற்கு குற்றம் என்று அர்த்தம். வானில் வட்டமிடும் கருடன், விஷத்தால் தீண்டப்பட்ட ஒன்றை பார்க்கும்போது, அந்தப் பார்வை பட்டவுடன் விஷம் நீங்கிவிடும்.

**குருவின் உருவங் குறித்தஅப் போதே**
**திரிமலந் தீர்ந்து சிவனவ னாமே.**

எப்படி கருடன் பார்வை பட்டவுடன் விஷம் நீங்குகிறதோ, அதுபோன்று குருவின் உருவம் குறித்த அப்போதே நம்மிடம் மும்மலம் என்கிற விஷம் நீங்கி சிவனாகலாம். ஆசான் பெருமையை மகான் திருமூலதேவர் சுட்டிக் காட்டுகிறார்.

மும்மலம் என்பது பசியால் வந்தது. பசி இயற்கையால் வந்தது. இயற்கை எப்படி வந்தது? இப்படி கேட்டுக் கொண்டே போகலாம். பதில் வந்து கொண்டே இருக்கும். ஆனால் இது புரியாத ஒன்று.

மும்மலம் என்று சொல்லப்பட்ட நச்சுத்தன்மை நீங்காமல், தீய சக்தி நீங்காமல் ஒருவன் முன்னேற முடியாது. ஆகவே ஆசானின் அனுக்கிரகத்தை நாம் பெற வேண்டும்.

நன்றாக ஆரோக்கியமாக இருப்பவன், தொழுநோய் உள்ளவன் அருகில் வந்தால் எப்படி அருவருப்பாக பார்ப்பானோ, அதுபோன்றுதான் உயர்ந்த நிலையில் உள்ள ஆசான், இழிந்த நிலையில் உள்ள நம்மை பார்ப்பார்.

ஆசானிடம் அன்பு செலுத்திய உடனேயே நமக்கு அருள் செய்ய மாட்டார். ஆசானே சலிக்கிற அளவிற்கு அன்பு செலுத்தினால்தான், ஆசானுடைய பார்வை நம்மீது படும். அப்படி அன்பு செலுத்தினால், **குருவின் உருவங் குறித்தஅப் போதே திரிமலந் தீர்ந்து சிவனவ னாமே** என்கிறார். அப்போதுதான் உன்னை

வஞ்சிக்கக் கூடிய நச்சுத்தன்மையுள்ள மும்மலம் நீங்கி, நீயும் சிவனும் ஒன்றாக முடியும்.

ஆசானின் தயவைப் பற்றிதான் தொடர்ந்து பேசிக் கொண்டு வருகிறோம்.

உடம்பில் நச்சுத்தன்மை இருப்பதால் விகாரம் இருக்கிறது. களிம்பு இருப்பதாலே மனதிலே தெளிவு இருக்காது. இதுவே பிறவிக்கு காரணமாகும்.

**பொருள்அல்ல வற்றைப் பொருள்என்று உணரும்**
**மருளான்ஆம் மாணாப் பிறப்பு.**

**– திருக்குறள் – மெய் உணர்தல் – குறள் எண் 351.**

அநித்தியப் பொருளை நித்தியமாகக் கருதுகின்ற காரணத்தினால்தான் பிறவித் துன்பம் வருகிறது. உடல் மாசு மனமாசை உண்டாக்கும். மனமாசு பொருளைப் பற்றிய உண்மை அறியாது அதை நித்தியம் என்று எண்ணும். அந்த மாசு நீங்கினால் நினைத்ததெல்லாம் கைகூடும். ஆமை நினைத்தாலே அதன் முட்டை ரூபமாவது போல், ஆசான் தயவிருந்தால் நினைத்ததெல்லாம் கைகூடும்.

மண்பாண்டம் செய்யக் கூடியவன் தேவையான மண்ணை எடுத்து வந்து சுத்தம் செய்து, தண்ணீர் ஊற்றி காலால் மிதிப்பான். அப்படி மிதித்த அந்த மண்ணை திரிகையில் ஏற்றி, தான் என்னென்ன மண்பாண்டம் செய்ய விரும்புகிறானோ, அவற்றையெல்லாம் செய்வான். மண் ஒன்றுதான் பாத்திரம் வெவ்வேறு வடிவங்களில் தயாராகும்.

இப்பொழுதெல்லாம் விதவிதமான பாத்திரங்கள். அப்போதெல்லாம் மண்பாண்டங்களை சமைக்க பயன்படுத்தினர். ஒரு பானை மற்றும் அந்த பானைக்கு தகுந்தாற் போல் உலைமூடி கொடுங்கள் என்பாள். மண்பாண்டங்களை உணவு சமைக்கவும், தண்ணீர் ஊற்றி வைத்துக் கொள்ளவும் அந்த காலத்தில் பயன்படுத்தினார்கள்.

குயவன் திரிகையில் மண்ணை ஏற்றுவான். அந்த திரிகையை அவனது மனைவி சுற்றிக் கொண்டிருப்பாள். அவள் பக்கத்து வீட்டில் குழம்பு சட்டி கேட்டார்கள், எதிர் வீட்டில் இரண்டு குடம் தண்ணீர் பிடிப்பது போல் சால் வேண்டுமென்று கேட்டார்கள், மூன்றாவது வீட்டில் உலைமூடியும் பானையும் கேட்டார்கள் என்று சொல்லிக் கொண்டிருப்பாள்.

அவன் திரிகையில் ஏற்றிய மண்ணைக் கொண்டு, தன் மனைவி சொல்ல சொல்ல குயவன் மண்பாண்டங்களை தயாரிப்பான். சால் செய்வான், பானை செய்வான், குழம்பு சட்டி செய்வான், உலைமூடி செய்வான். அதைப்போல் எனது ஆசான் எதை நினைத்தாலும், அதை செய்து முடிப்பார் என்று ஆசான் திருமூலதேவர் சுட்டிக்காட்டுகிறார்.

**குசவன் திரிகையில் ஏற்றிய மண்ணைக்**
**குசவன் மனத்துற்ற தெல்லாம் வனைவன்**
**குசவனைப் போல்எங்கள் கோன்நந்தி வேண்டில்**
**அசைவில் உலகம் அதுஇது வாமே.**

**– திருமந்திரம் – அநுக்கிரகம் – கவி எண் 443.**

**குசவன் திரிகையில் ஏற்றிய மண்ணைக் குசவன் மனத்துற்ற தெல்லாம் வனைவன் –** குசவன் திரிகையில் ஏற்றிய மண்ணை, தனக்கு என்னென்ன மண்பாண்டம் வேண்டுமோ அதையெல்லாம் செய்வான்.

**அசைவில் உலகம் அதுஇது வாமே –** அது இது என்று சொன்னாலே உயிரற்றவை என்று சொல்வார்கள். உயிரற்ற ஜடப்பொருளும் உயிர் பெறும் என்று சொல்கிறார்கள்.

உனக்கு இருப்பது ஜடத்திற்குரிய அறிவு, உணர்வற்ற அறிவு. குசவன் விருப்பமான மண்பாண்டத்தை செய்து கொடுப்பதைப் போல், தினமும் உண்மைப் பொருளறிந்த ஆசான் அகத்தீசர், மகான் திருமூலதேவர், மகான் போகமகாரிஷி போன்ற ஞானிகளைப் பூசித்தால் நீ நினைத்ததெல்லாம் செய்யலாம். நீ என்ன நினைக்கிறாயோ, அது கைகூடும். இதற்கு எடுத்துக்காட்டாக அசைவில் உலகம் என்பார்.

**குசவனைப் போல்எங்கள் கோன்நந்தி வேண்டில் அசைவில் உலகம் அதுஇது வாமே –** ஜடப்பொருளாகிய உன் அறிவு, உணர்வற்ற உன் அறிவு அது இது என்ற நிலையை அடையும். பிறகு நாளுக்குநாள் உயர்வடையும்.

ஞானிகளை தொடர்ந்து வணங்கி வந்தால், தொட்டதெல்லாம் துலங்கும், பேசுவதெல்லாம் வேதம் ஆகும்.

வாசியை உன்னால் கட்ட முடியாது. ஆனால் எங்களுக்கு ஆசான் வாசிவசப்பட செய்தார். நீ கற்க முடியாத ஒன்றை எனக்கு கற்பித்தார். உன்னால் உணர முடியாத ஒன்றை ஆசான் எனக்கு உணர வைத்தார். நீங்கள் அணுக முடியாத ஒன்றை ஆசான் அணுக செய்தார். அதனால் இப்பொழுது குண்டலினி சக்தியை தசநாதமாக காதில் கேட்டுக் கொண்டிருக்கிறேன். எப்பொழுது உருத்தரித்த நாடியில் காற்று ஒடுங்குகிறதோ, அப்பொழுதே தசநாதம் கேட்க ஆரம்பித்துவிடும்.

**உருத்தரித்த நாடியி லொடுங்குகின்ற வாயுவை**
**கருத்தினா லிருத்தியே கபாலமேற்ற வல்லிரேல்**
**விருத்தரும் பாலராவர் மேனியுஞ் சிவந்திடும்**
**அருட்டரித்த நாதர்பாதம் அம்மைபாதம் உண்மையே.**

**– மகான் சிவவாக்கியர் – கவி எண் 5.**

**புறப்பட்டுப் புக்குத் திரிகின்ற வாயுவை**
**நெறிப்பட வுள்ளே நின்மல மாக்கில்**
**உறுப்புச் சிவக்கும் உரோமங் கறுக்கும்**
**புறப்பட்டுப் போகான் புரிசடை யோனே.**

**– திருமந்திரம் – பிராணாயாமம் – கவி எண் 575.**

குண்டலினி சக்தியை அவரவர் தனது தருமபலத்தால், தவசக்தியால், சான்றோர் தொடர்பால், பக்தி விசுவாசத்தால், சிறப்பறிவால், மென்மையான அறிவு போன்றவற்றால்தான் அணுக முடியும். இதை யாராலும் மற்றவர்களுக்கு சொல்லித் தர முடியாது.

ஆன்மீகத் துறையில் முறையான வழியில் முன்னேற தினமும் காலையில் ஞானிகளை பூஜை செய்ய வேண்டுமென்று நாங்கள் சொல்வோம். மனைவியிடம், பிள்ளைகளிடம், தாய்தந்தையரிடம் அன்பு காட்டு என்போம். பொருள் சேர்க்கும் பொழுது நெறிக்குட்பட்டு சேர்க்க வேண்டும்.

**பழியஞ்சிப் பாத்தூண் உடைத்தாயின் வாழ்க்கை**
**வழியெஞ்சல் எஞ்ஞான்றும் இல்.**

**– திருக்குறள் – இல்வாழ்க்கை – குறள் எண் 44.**

நெறியோடு பொருளை சேர்த்து, விருந்தை உபசரித்து, மனைவி மக்களை பாதுகாத்து நெறியோடு கடமைகளைச் செம்மையாக செய்து வர வேண்டும். அதேசமயத்தில் தினமும் பூஜை செய்ய வேண்டும். இப்படி அணுஅணுவாக ஞானிகளின் ஆசியைப் பெற்று வாசி வசப்பட வேண்டும். இப்படித்தான் நாங்கள் பயிற்சி கொடுப்போம்.

முதலில் ஒருவனுக்கு தர்ம சிந்தனையை போதிக்க வேண்டும், அவனை பூஜை செய்ய வைக்க வேண்டும். ஒரு மனிதன் சித்தி பெற வேண்டுமென்றால் தவமும் தருமமும் அவசியம் வேண்டும். இப்படி இரண்டையும் செய்யாவிட்டால் ஞானியாக முடியாது. நாங்கள் சொல்வது உண்மை.

இந்தத் துறையில் பழித்தலும், சலித்தலும் இருக்கக் கூடாது, யாரையும் இகழ்ந்து பேசி பகையை தேடிக் கொள்ளக்கூடாது. இந்தத் துறை புனிதமான துறை, பூஜை செய்துதான் ஒருவன் முன்னேற வேண்டுமென்பதை நீங்களெல்லாம் உணர வேண்டும்.

–சுபம்–

# முருகன் திருவடி வாழ்க

## குருநாதர் அருளிய உபதேசங்கள் (தொடர்ச்சி)

166. சோம்பல் உள்ளவன் வெற்றி காணமாட்டான்.
167. அளந்து செலவு செய்பவன் அறிவுடையவன் ஆவான்.
168. விருந்தை உபசரிப்பவன் நட்புடன் வாழ்வான்.
169. சந்நியாசம் செய்வதிலும் மூடர் உண்டு, சம்சாரம் செய்வதிலும் ஞானி உண்டு.
170. பிறருக்கு செய்யும் உதவியே நமக்கு செய்து கொள்ளும் நன்மையாகும்.
171. அறிந்து செய்யும் உதவியே அறிவுடைமை ஆகும்.
172. பிறரை கண்ணீர்விடச் செய்தவனே கண்ணீர் விடுவான்.
173. நல்லவன் என்பவனே வல்லவன் ஆவான்.
174. முயற்சி உடையான் தளர்ச்சி அடையான்.
175. உள்ளத் தூய்மையே சொல்லின் தூய்மையாகும்.
176. பூஜை என்பதே புண்ணியமாகும்.
177. உண்மை என்பதே அகத்தீசன் ஆகும்.
178. மோட்சம் என்பதே அகத்தீசன் ஆகும்.
179. ஒப்புரவாளனே உயர்ந்தவன் ஆவான்.
180. வாழ்வை அறிந்தவன் தாழ்வு அடையான்.
181. பகையில்லா வாழ்வு பண்பான வாழ்வு.
182. சுயநலமில்லாதவனே பிறர்நலம் விரும்புவான்.
183. பகுத்து உண்பதே பண்பதாகும்.
184. அளந்து உண்பதே ஆரோக்கியமாகும்.
185. தன்னை மதிப்பவன் பிறரை மதியான்.
186. தன்னை அறிவாளி என்று நினைப்பவன் பிறரை முட்டாள் என்று நினைப்பான்.
187. பகைமை இல்லாத வாழ்வே தகைமையான வாழ்வு.
188. பொறாமை இல்லாமையே புண்ணியமாகும்.
189. கோபம் உள்ளவன் பாவியாவான்.
190. புலனை வென்றவனே வீரனாவான்.
191. காசாசை உள்ளவனுக்கு ஞானம் இல்லை. ஞானம் உள்ளவனுக்கு காசாசை இல்லை.
192. தமிழைக்கற்றவன் பாவ புண்ணியம் அறிவான்.
193. தமிழைக்கற்றவன் ஞானி ஆவான்.
194. தமிழைக்கற்றவன் கடவுள் ஆவான்.
195. தமிழைக்கற்றவன் வாலை பூஜை செய்வான்.
196. தமிழைக்கற்றவன் நாதவிந்துவை அறிவான்.
197. தமிழைக்கற்றவன் பண்பாளன் ஆவான்.

198. தமிழைக்கற்றவன் ஜீவான்மாவையும், பரமான்மாவையும் அறிவான்.
199. தமிழைக்கற்றவன் இயற்கையை அறிவான்.
200. தமிழைக்கற்றவன் சத்து சித்து ஆனந்தம் அறிவான்.
201. தமிழைக்கற்றவன் உயிரையும், உடம்பையும் அறிவான்.
202. தமிழைக்கற்றவன் தூல சூட்சமத்தை அறிவான்.
203. தமிழைக்கற்றவன் எல்லாம் கற்றவன் ஆவான்.
204. தமிழைக்கற்றவன் தலைவன் ஆவான்.
205. தமிழைக்கற்றவன் தமிழ்தான் உலகம் என்று அறிவான்.
206. அன்பு பொருந்தி வாழ அகத்தீசா என்று கூறுங்கள்.
207. ஆக்கம் பெற்று வாழ அகத்தீசா என்று கூறுங்கள்.
208. இல்லறம் சிறக்க அகத்தீசா என்று கூறுங்கள்.
209. ஈகை குணம் பெற அகத்தீசா என்று கூறுங்கள்.
210. உண்மைப்பொருள் அறிய அகத்தீசா என்று கூறுங்கள்.
211. ஊக்கம் பெற அகத்தீசா என்று கூறுங்கள்.
212. எண்ணம் சித்திக்க அகத்தீசா என்று கூறுங்கள்.
213. ஏற்றம் பெற்றிட அகத்தீசா என்று கூறுங்கள்.
214. ஐயம் நீங்கிட அகத்தீசா என்று கூறுங்கள்.
215. ஒண்பொருள் பெற்றிட அகத்தீசா என்று கூறுங்கள்.
216. ஓங்காரம் கண்டிட அகத்தீசா என்று கூறுங்கள்.
217. ஔடதம் அறிந்திட அகத்தீசா என்று கூறுங்கள்.
218. அகரம் உகரம் அறிந்தால் காமம் அற்றுவிடும்.
219. அகரம் உகரம் அறிந்தால் வஞ்சனை அற்றுவிடும்.
220. அகரம் உகரம் அறிந்தால் வன்சொற்கள் பேசார்.
221. அகரம் உகரம் அறிந்தால் குணக்கேடுகள் அனைத்தும் நீங்கும்.
222. அகரம் உகரம் அறிந்தால் உபசாந்தம் உண்டாகும்.
223. அகரம் உகரம் அறிந்தால் கார சாரத்தால் தேகம் கனகம் (தங்கம்) ஆக்கலாம் என்பதை அறியலாம்.
224. அகரம் உகரம் அறிந்தால் சிதம்பர இரகசியம் என்பதே புருவமத்தி என்பதை அறியலாம்.
225. உடம்பையும் உயிரையும் அறிவதே உண்மை ஞானமாகும்.
226. உடம்பையும் உயிரையும் அறிவதே உண்மையை அறிவதாகும்.
227. உடம்பையும் உயிரையும் அறிவதே சிறப்பறிவாகும்.
228. உடம்பையும் உயிரையும் அறிந்தவன் எல்லாம் அறிந்தவன் ஆவான்.
229. உடம்பையும் உயிரையும் அறிவதற்கு புண்ணியமும் அருள்பலமும் வேண்டும்.
230. புண்ணியபலமும் அருள்பலமும் பெறுவதற்கு ஆசான் அகத்தீசர் ஆசி இருக்க வேண்டும்.

நமது ஓங்காரக்குடில் சார்பாக தொடர்ந்து 44 வருடங்களாக அன்னதானம் நடைபெறுகிறது. தற்போது, நச்சுக்கிருமி மற்றும் இயற்கை சீற்றங்கள் வராது இருக்க, நமது ஓங்காரக்குடில் சார்பாக அன்னதானம் நடைபெறுகிறது. இந்த அன்னதானத்திற்கு பொருளுதவி செய்ய விரும்புகின்றவர்கள் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பலாம்.

**DD, Cheque, M.O. எடுக்க வேண்டிய முகவரி :**

**SRI AGATHIAR SANMAARGA CHARITABLE TRUST,**
Payable at Thuraiyur or Trichy.

**Account Details :**

| | | |
|---|---|---|
| **A/C Name** | : | **SRI AGATHIAR SANMAARGA CHARITABLE TRUST** |
| **A/C NO** | : | **911010045586268** |
| **Bank** | : | **Axis Bank** |
| **Branch** | : | **Thuraiyur.621010** |
| **IFS Code** | : | **UTIB0001272** |

**அனுப்ப வேண்டிய முகவரி :**

**SRI AGATHIAR SANMAARGA CHARITABLE TRUST,**
113, Extension, Thuraiyur - 621010, Trichy (Dt),
Tamilnadu, India. Ph - 04327 255184. www.agathiar.in

ஞானிகள் திருஉருவப்படங்கள்,
ஆசான் அருளிய நூல்கள், தினசரி, மாத நாட்காட்டிகள்,
ஆசான் அருளுரைகள் அடங்கிய ஒலி ஒளி குறுந்தகடுகள் CD
மற்றும் ஞானத்திருவடி நூல்

கிடைக்கப் பெறாதவர்களும் தொடர்புகொள்ள வேண்டிய முகவரி

**மகான் பதஞ்சலியார் புத்தக நிலையம்,**
ஸ்ரீஅகத்தியர் சன்மார்க்க சங்கம்,
ஓங்காரக்குடில், துறையூர் – 621 010.
✆ 04327–255184,
செல்: 90950 33311
மின்னஞ்சல் : kudilbooks@gmail.com

அகத்தியர் துணை


மகான் அகத்தியர்


குருநாதர்



ஓங்காரக்குடிலாசான், முருகப்பெருமானின் கல்கி அவதாரம், தவத்திரு **ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகள்** அவர்களுடைய சொற்பொழிவுகளை ஒலி, ஒளி (Audio Video) வடிவமாக கேட்கவும் பார்க்கவும் மற்றும் பதிவிறக்கம் (Download) செய்யவும்,

# www.agathiar.org

என்ற இணைய தளத்திற்கு செல்லவும். மேலும் நித்ய சுவடிகள் பதிவிறக்கம் செய்து படித்துக் கொள்ளலாம்.

குருவருள்வேண்டி . . .

மரு. இரா.விஜயகுமார் – இரா.மாதவன்

**அன்னை மருத்துவமனை,**

**துறையூர்.**

முருகப்பெருமானின் கல்கி அவதாரம்

தவத்திரு **ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகள்** அருளுகின்ற மாத இதழ்

# ஞானத்திருவடி

கடவுளால் இயற்றப்பட்ட நூல். உலக மக்கள் துன்பமில்லாமல் வாழவும், ஜென்மத்தைக் கடைத்தேற்றிக் கொள்ளவும், ஞானிகள் வழிமுறைகளை தொகுத்து கொடுத்துள்ளார்கள். எனவே இந்த நூலை படித்து மற்றவர்களுக்கு வாங்கி கொடுப்பது மிகப்பெரிய புண்ணியம் ஆகும். ஞானத்திருவடி நூலிற்கு சந்தா செலுத்துதல், சந்தாவை புதுப்பித்தல் மற்றும் ஞானத்திருவடி நூலை வாங்கி கொடுப்பதற்கும் உங்கள் அருகாமையில் உள்ளவர்களிடம் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

| | | |
|---|---|---|
| 1. | சரவணன், மண்ணச்சநல்லூர், திருச்சி | 84289 05393 |
| 2. | கோவை – | |
| | பிரபு, ஒண்டிபுதூர் | 90035 67548 |
| | கிருஷ்ணமூர்த்தி, இடையர்வீதி | 98947 49339 |
| | தெய்வசேனா, வடவள்ளி | 77088 93843 |
| | ஸ்ரீதர், காட்டூர் | 94872 24035 |
| | கோவிந்தராஜ், துரை டிரைவிங், ஸ்கூல், சூலூர் | 98651 94194 |
| 3. | சென்னை – | |
| | ரெங்கநாதன், வடபழனி | 96770 17170 |
| | ஜெயராஜ், அம்பத்தூர் | 94441 75629 |
| | முருகவேல், அம்பத்தூர் | 95660 54957 |
| | ராமச்சந்திரன், மேடவாக்கம் | 87544 40544 |
| | ரகுபதி, திருவொற்றியூர் | 99622 32314 |
| | சௌந்தரராஜன், மீஞ்சூர் | 98406 24169 |
| 4. | மோகன் கென்னடி, விருதுநகர், மதுரை | 98421 01357 |
| 5. | கோபாலகிருஷ்ணன், மணப்பாறை | 80121 63639 |
| 6. | பழனிச்சாமி, கரூர் | 90955 16455 |
| 7. | பாஸ்கர், தூத்துக்குடி | 98650 84856 |
| 8. | சசிக்குமார், மார்த்தாண்டம், நாகர்கோவில் | 94893 93303 |
| 9. | சரவணன், திருநெல்வேலி | 93677 55008 |
| 10. | கோபிநாத், சேலம் | 78713 99100 |
| 11. | பாண்டுரங்கன், திருவண்ணாமலை | 95004 74192 |
| 12. | பாபு, தஞ்சாவூர் | 97891 66458 |
| 13. | சிவசங்கரன், ராமநாதபுரம் | 98426 23117 |
| 14. | யூவி, நாமக்கல் | 99651 29647 |
| 15. | பிரேம், ஈரோடு | 76674 37673 |
| 16. | செல்லத்துரை, சித்தோடு | 90957 45489 |
| 17. | ராஜேந்திரன், வேதாரண்யம் | 94885 32616 |

முருகப்பெருமான் துணை

முருகப்பெருமானின் கல்கி அவதாரம்

தவத்திரு **ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகள்** அவர்கள் தலைமையில்

## ஆனி பௌர்ணமி விழா

நாள் : **சார்வரி ஆண்டு, ஆனி மாதம் 20ஆம் தேதி,**
**04.07.2020 - சனிக்கிழமை காலை 10 மணி அளவில்**

இடம் : **ஓங்காரக்குடில், துறையூர்.**

**அனைவரும் வருக!** நிகழ்ச்சி நிரல் **குருவருள் பெறுக!!**

காலை 6.00 மணி – **சரவண ஜோதி தரிசனம்** மற்றும் **வழிபாடு**
காலை 6.30 மணி – **அருட்பெருஞ்ஜோதி அகவல் பாராயணம்**
காலை 9.00 மணி – **தவத்திரு குருநாதர் அவர்கள் தீட்சை வழங்குதல்**
காலை 9.30 மணி – **சித்தர்கள் வழிபாடு**
பகல் 12 மணி – **தவத்திரு குருநாதர் அவர்களின் சிறப்பு அருளுரை**

காலை 8 மணி முதல் மதியம் 3 மணி வரை
ஞானிகளை பூஜித்த அருட்பிரசாதம் (அன்னதானம்) வழங்கப்படும்.

நிகழ்ச்சிகளின் உபயதாரர் :
**D.ராம்குமார், D.P.சுதாகர்,** கோவை. **D.ரெங்கநாதன்,** சென்னை.

முருகப்பெருமான் துணை

முருகப்பெருமானின் கல்கி அவதாரம்

தவத்திரு **ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகள்** அவர்கள் தலைமையில்

## ஆடி பௌர்ணமி விழா

நாள் : **சார்வரி ஆண்டு, ஆடி மாதம் 19ஆம் தேதி,**
**03.08.2020 - திங்கட்கிழமை காலை 10 மணி அளவில்**

இடம் : **ஓங்காரக்குடில், துறையூர்.**

**அனைவரும் வருக!** நிகழ்ச்சி நிரல் **குருவருள் பெறுக!!**

காலை 6.00 மணி – **சரவண ஜோதி தரிசனம்** மற்றும் **வழிபாடு**
காலை 6.30 மணி – **அருட்பெருஞ்ஜோதி அகவல் பாராயணம்**
காலை 9.00 மணி – **தவத்திரு குருநாதர் அவர்கள் தீட்சை வழங்குதல்**
காலை 9.30 மணி – **சித்தர்கள் வழிபாடு**
பகல் 12 மணி – **தவத்திரு குருநாதர் அவர்களின் சிறப்பு அருளுரை**

காலை 8 மணி முதல் மதியம் 3 மணி வரை
ஞானிகளை பூஜித்த அருட்பிரசாதம் (அன்னதானம்) வழங்கப்படும்.

நிகழ்ச்சிகளின் உபயதாரர் :
**D.ராம்குமார், D.P.சுதாகர்,** கோவை. **D.ரெங்கநாதன்,** சென்னை.

முருகப்பெருமானின் கல்கி அவதாரம்

தவத்திரு **ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகள்**

## ஓங்காரக்குடில் வெளியீடுகள்

| | | |
|---|---|---|
| 1. | சித்தர்கள் போற்றித் தொகுப்பு (தமிழ்) | ரூ. 5 |
| 2. | சித்தர்கள் போற்றித் தொகுப்பு (ஆங்கிலம்) | ரூ. 20 |
| 3. | சித்தர்கள் போற்றித் தொகுப்பு (சமஸ்கிருதம்) | ரூ. 20 |
| 4. | சித்தர்கள் போற்றித் தொகுப்பு (மலையாளம்) | ரூ. 15 |
| 5. | சித்தர்கள் போற்றித் தொகுப்பு (கன்னடம்) | ரூ. 20 |
| 6. | சித்தர்கள் போற்றித் தொகுப்பு (குஜராத்தி) | ரூ. 20 |
| 7. | சித்தர்கள் போற்றித் தொகுப்பு (மராட்டி) | ரூ. 20 |
| 8. | சித்தர்கள் போற்றித் தொகுப்பு (பெங்காளி) | ரூ. 20 |
| 9. | சித்தர்கள் போற்றித் தொகுப்பு (பஞ்சாபி) | ரூ. 20 |
| 10. | ஞானிகள் அருளிய தினசரி பாராயண நூல் | ரூ. 75 |
| 11. | அனுபவ விளக்கப் பத்திரிக்கைகள் | ரூ. 45 |
| 12. | மனுமுறைகண்ட வாசகம் | ரூ. 50 |
| 13. | மனுமுறைகண்ட வாசகம் (ஆங்கிலம்) | ரூ. 100 |
| 14. | திருமந்திர உபதேசம் விளக்கவுரை | ரூ. 40 |
| 15. | திருமந்திர உபதேசம் விளக்கவுரை (ஆங்கிலம்) | ரூ. 40 |
| 16. | சுகமான வாசியே அகத்தீசராகும் | ரூ. 25 |
| 17. | திருக்குறள் ஞானஅமுது – குருநாதர் அருளுரை | ரூ. 60 |
| 18. | தன்னை அறியும் அறிவே தகைமையாகும் | ரூ. 15 |
| 19. | ஜீவகாருண்ய ஒழுக்கம் | ரூ. 20 |
| 20. | ஜீவகாருண்ய ஒழுக்கம் (ஆங்கிலம்) | ரூ. 30 |
| 21. | தமிழைக் கற்றால் வரும் நன்மைகள் | ரூ. 40 |
| 22. | ஞானத்திருவடி ஆண்டு மலர் தொகுப்பு | ரூ. 150 |
| 23. | சிவஞானபோதம் – குருநாதர் அருளுரை | ரூ. 30 |
| 24. | ஆத்திசூடி – விளக்கவுரை | ரூ. 50 |
| 25. | ஆத்திசூடி – விளக்கவுரை (ஆங்கிலம்) | ரூ. 100 |
| 26. | சித்தர்களின் பாடல்களுக்கு அரங்கரின் அருளுரைகள் | ரூ. 70 |
| 27. | நித்திய ஆசி நூல் தொகுப்பு | ரூ. 200 |
| 28. | 131 சித்தர்கள் அருளிய சயன சூட்சும ஆசி நூல் தொகுப்பு | ரூ. 200 |

| | | |
|---|---|---|
| 29. | 63 நாயன்மார்கள் 12 ஆழ்வார்கள் அருளிய சயன சூட்சும ஆசி நூல் தொகுப்பு | ரூ. 150 |
| 30. | 131 சித்தர்கள் அருளிய தியான சூட்சும ஆசி நூல் தொகுப்பு | ரூ. 200 |
| 31. | 63 நாயன்மார்கள் 12 ஆழ்வார்கள் அருளிய தியான சூட்சும ஆசி நூல் | ரூ. 180 |
| 32. | குருநாதர் அவர்களின் ஆன்மீகச் சொற்பொழிவு ஆடியோ, வீடியோ டிவிடி<br>புனித ஞான அகத்தீசனின் பொதிகை கீதம் – ஆடியோ சிடி<br>ஞானிகள் அருளிய ஞானிகள் போற்றி, அரங்கர் சரணம், அரங்கர் போற்றி, அரங்கர் புகழ்மாலை ஆடியோ சிடி<br>சித்தர் போற்றித் தொகுப்பு<br>அகத்தீசன் தத்துவ புகழுரை<br>ஆசான் பாடல்கள் ஆடியோ சிடி.<br>சித்தர் பாடல்கள், கொடி வணக்கம்,<br>மகான் கருவூரார் புகழ் வெண்பா, மகான் கஞ்சமலைச் சித்தர் புகழ் வெண்பா ஞானக்குறள் | ரூ. 10 |
| 33. | ஓங்காரக்குடிலின் ஆவணப்படம் | ரூ. 25 |
| 34. | ஞானசூட்சும ஆசி நூல் (தொகுப்பு – 1) | ரூ. 130 |
| 35. | ஞானசூட்சும ஆசி நூல் (தொகுப்பு – 2) | ரூ. 200 |
| 36. | ஞானிகள் திருஉருவப்படங்கள் | |

# அருளுரை

| | | |
|---|---|---|
| 1. | கீர்த்தித் திருஅகவல் | ரூ.15 |
| 2. | ஞானிகள் பற்றிய அனுபவ விளக்கம் | ரூ.15 |
| 3. | மகான் இராமதேவர் அருளிய யோகப்பயிற்சி பாகம்–2 | ரூ.15 |
| 4. | இருமை அறிந்தவர் பெருமை | ரூ.15 |
| 5. | ஞானத்திற்கு தடை சந்தேகமே | ரூ.15 |
| 6. | மோன நிலையே ஞானநிலை | ரூ.15 |
| 7. | அருணகிரிநாதர் புகழ்மாலை | ரூ.15 |
| 8. | முக்திக்கு தலைவன் முருகனே (பாகம் – 1) | ரூ.15 |
| 9. | முக்திக்கு தலைவன் முருகனே (பாகம் – 2) | ரூ.15 |
| 10. | முக்திக்கு தலைவன் முருகனே (பாகம் – 3) | ரூ.15 |
| 11. | முக்திக்கு தலைவன் முருகனே (பாகம் – 4) | ரூ.15 |
| 12. | பணிவே செம்மையான வாழ்வு | ரூ.15 |
| 13. | நோயில்லா வாழ்வு வாழ வேண்டுமா | ரூ.15 |

| | | |
|---|---|---|
| 14. | ஒன்றே குலம் ஒருவனே தேவன் | ரூ.15 |
| 15. | சோம்பல் ஆகாது – பாகம் 1 | ரூ.15 |
| 16. | நட்பே நன்மை தரும் | ரூ.15 |
| 17. | நன்றி மறவாதே | ரூ.15 |
| 18. | உயிருக்கு மருத்துவம் | ரூ.15 |
| 19. | விருந்தே வேள்வியாகும் | ரூ.15 |
| 20. | பூதாதி இலயம் | ரூ.15 |
| 21. | பட்டினத்தாரின் யோகமும் ஞானமும் | ரூ.15 |
| 22. | குருபக்தியே குணப்பண்பு தரும் | ரூ.15 |
| 23. | முருகன் ஆசி பெற உபாயம் (பகுதி –1) | ரூ.15 |
| 24. | முருகன் ஆசி பெற உபாயம் (பகுதி –2) | ரூ.15 |
| 25. | வள்ளுவன் கடவுள் (பாகம் – 1) | ரூ.15 |
| 26. | வள்ளுவன் கடவுள் (பாகம் – 2) | ரூ.15 |
| 27. | வள்ளுவன் கடவுள் (பாகம் – 3) | ரூ.15 |
| 28. | ஞானிகள் பூஜையே தவமாகும் | ரூ.15 |
| 29. | குருவருளே தவமாகும் | ரூ.15 |
| 30. | முருகன் ஆசிபெற உபாயம் – 3 | ரூ.15 |
| 31. | முருகன் ஆசிபெற உபாயம் – 4 | ரூ.15 |
| 32. | பூஜை | ரூ.15 |
| 33. | தவம் | ரூ.15 |
| 34. | அருட்பெருஞ்ஜோதியை அடையும் முறை | ரூ.15 |
| 35. | விதியை வெல்லும் பக்தி | ரூ.15 |
| 36. | தினசரி பாராயண நூல் | ரூ.15 |
| 37. | எமபயம் நீங்க ஓர் உபாயம் | ரூ.15 |
| 38. | குடமுழுக்கு விழா | ரூ.15 |
| 39. | பௌர்ணமி நோன்பு | ரூ.15 |
| 40. | புறபூஜையும் அகபூஜையும் | ரூ.15 |
| 41. | பூஜை முறையும் வாழ்க்கையும் | ரூ.15 |
| 42. | சுப்பிரமணியர் கடவுளானது எப்படி | ரூ.15 |
| 43. | தலைவன் திருவடியே துணை | ரூ.15 |

| | | |
|---|---|---|
| 44. | தயவே சித்தி தரும் | ரூ.15 |
| 45. | திருமந்திர உபதேசம் | ரூ.15 |
| 46. | ஆன்மீக அரசியல் | ரூ.15 |
| 47. | தானமும் தவமும் | ரூ.15 |
| 48. | குருசீடர் நெறிமுறை | ரூ.15 |
| 49. | இல்லறத்தார்க்கு ஓர் உபதேசம் | ரூ.15 |
| 50. | சைவமே ஜென்மத்தைக் கடைத்தேற்றும் | ரூ.15 |
| 51. | வாசி வசப்படல் | ரூ.15 |
| 52. | உண்மை ஆன்மீகம் என்றால் என்ன? | ரூ.15 |
| 53. | எது ஆன்மீகம் | ரூ.15 |
| 54. | விநாயகர் அகவல் | ரூ.15 |
| 55. | பிரபஞ்ச இயக்கம் | ரூ.15 |
| 56. | இருள்சேர் இருவினையும் சேரா இறைவனே வள்ளுவப்பெருமான் | ரூ.15 |
| 57. | தன்னை அறியும் முறை | ரூ.15 |
| 58. | நமசிவாயம் | ரூ.15 |
| 59. | மோட்சகதி | ரூ.15 |
| 60. | திருக்குறளில் குற்றங்கடிதல் | ரூ.15 |
| 61. | பூரணம் எனும் யோகரகசியம் | ரூ.15 |
| 62. | சிவஞானபோதம் 12வது சூத்திர விளக்கம் | ரூ.15 |
| 63. | பஞ்சபூத விளக்கம் | ரூ.15 |
| 64. | சித்த தத்துவமும் பொருளாதாரமும் | ரூ.15 |
| 65. | ஆலய வழிபாடு | ரூ.15 |
| 66. | சமூக சான்றோரும் ஆன்மீக சான்றோரும் | ரூ.15 |
| 67. | சன்மார்க்கத்தில் சித்தாந்தம் | ரூ.15 |
| 68. | சொர்க்க வாசல் | ரூ.15 |
| 69. | சும்மா இரு என்னும் இரகசியம் | ரூ.15 |
| 70. | காயமே இது பொய்யடா | ரூ.15 |

**மகான் பதஞ்சலியார் புத்தக நிலையம்**

**ஓங்காரக்குடில், துறையூர்.**

செல் : 90956 33344

ஓங்காரக்குடில் வெளியீடுகளைப் பெற

# மகான் பதஞ்சலியார் புத்தக நிலையம்

ஓங்காரக்குடில், துறையூர் - 621010, திருச்சி மாவட்டம்.
செல் - 90956 33344 kudilbooks@gmail.com

எங்களது வெளியீடுகளைப் பெற...

தங்களின் முழு முகவரி மற்றும் தங்களின் செல் போன் எண் தெளிவாக எழுதி புத்தகத்திற்கு உண்டான தொகையை கீழ்க்கண்ட முறைகளில் அனுப்பலாம். (கூரியர் செலவிற்கும் சேர்த்து அனுப்பவும்)

Cheque - காசோலை
DD - வரைவோலை
MO - பணவிடை

...................................

Cheque, DD எடுக்க வேண்டிய பெயர் -

**MAHAN PATHANJALIYAR BOOK STALL,**
**Payable at "Thuraiyur" or "Tiruchirapalli"**

ஓங்காரக்குடில் வெளியீடுகளை பெற கீழ்க்கண்ட முறையில் பணம் அனுப்பலாம்.

Amount Transfer செய்ய வேண்டிய விபரம் -

| | | |
|---|---|---|
| **NAME** | : | **MAHAN PATHANJALIYAR BOOK STALL** |
| **BANK NAME** | : | **Karur Vysya Bank (KVB)** |
| **ACCOUNT NO** | : | **1646135000003720** |
| **IFSC CODE** | : | **KVBL0001646** |
| **BRANCH** | : | **THURAIYUR** |

**இணையம் மூலமாக ஞானத்திருவடி சந்தா செலுத்தவும் மற்றும் புதுப்பிக்கவும் புதிய வசதி**

www.agathiar.in என்ற இணையத்தில் சென்று தங்களுடைய பெயர் மற்றும் முகவரி, அலைபேசி எண் பதிவு செய்து, New User Name and Password கொடுத்து Register செய்து சந்தா செலுத்தினால் மாதந்தோறும் ஞானத்திருவடி மாத இதழ் தங்களது இல்லத்திற்கு தபால்நிலையம் மூலம் அனுப்பப்படும்.

**Payment Options : Net Bank, Debit (or) Credit Card, Paytm**

தொடர்புக்கு :

செல் : **96882 78666, trustkudil@gmail.com**

முருகப்பெருமான் துணை

# நன்கொடை வழங்க...

## அன்னதானம் செய்தால் துன்பங்கள் விலகும்.

கடந்த 43 ஆண்டுகளாக 15 கோடி மக்களுக்கு மேலாக அன்னதானம் செய்து தன் அறப்பணியினை சிறப்புற தொடர்ந்து வருகிறது நமது ஓங்காரக்குடில். இந்த அறப்பணிகளில் நீங்களும் பங்கேற்க வேண்டுமா.

பிரச்சனைகள் தீரவும், தங்களின் பிறந்தநாள், திருமணநாள், குழந்தைகளின் பிறந்த நாள், தொழில் அல்லது வியாபாரம் தொடங்கிய நாள் மற்றும் பண்டிகை நாட்களிலும் அன்னதானம் செய்ய விரும்புவோர் DD, Cheque, M.O. மூலம் தங்களின் அருட்கொடையினை வழங்கலாம்.

தங்கள் நன்கொடைக்கு 80G பிரிவின் படி வருமானவரி விலக்கு உண்டு.

**DD, Cheque, M.O. எடுக்க வேண்டிய முகவரி :**

**SRI AGATHIAR SANMAARGA CHARITABLE TRUST,**
Payable at Thuraiyur or Trichy.

**Account Details :**

| | | |
|---|---|---|
| A/C Name | : | SRI AGATHIAR SANMAARGA CHARITABLE TRUST |
| A/C NO | : | 911010045586268 |
| Bank | : | Axis Bank |
| Branch | : | Thuraiyur.621010 |
| IFS Code | : | UTIB0001272 |

**அனுப்ப வேண்டிய முகவரி :**

**SRI AGATHIAR SANMAARGA CHARITABLE TRUST,**
113, Extension, Thuraiyur - 621010, Trichy (Dt),
Tamilnadu, India. Ph - 04327 255184. www.agathiar.in

**www.agathiar.in**

என்ற இணைய தளத்தில் உங்கள் பெயரையும், கடவுச்சொல்லையும் பதிந்தபிறகு நன்கொடை செலுத்தி தாங்களும் அன்னதானத்தில் பங்கேற்று புண்ணியத்தை பெறலாம்.

தாங்கள் அனுப்பிய தொகைக்கான இரசீது தபாலில் அனுப்பி வைக்கப்படும்.

இரசீது கிடைக்கப்பெறாதவர்கள் தொடர்புக்கு :

96882 78666, 91503 75562. trustkudil@gmail.com

அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை

அருட்பெருஞ்ஜோதி
அருட்பெருஞ்ஜோதி

முருகப்பெருமானின் கல்கி அவதாரம்

# தவத்திரு ஆறுமுக அரங்கமகா தேசிகரின் அமுத மொழிகள்...

1. முருகா என்றால் மும்மலக் குற்றங்கள் நீங்கும்.
2. முருகா என்றால் செல்வநிலை பெருகும்.
3. முருகா என்றால் நல்லறிவைப் பெறலாம்.
4. முருகா என்றால் வறுமை, நோய்நொடிகள் நீங்கும்.
5. முருகா என்றால் ஞானவாழ்வு கைகூடும்.
6. முருகா என்றால் மரணமில்லாப் பெருவாழ்வைப் பெறலாம்.

## உயிர் இரக்கமே இறைவழிபாடு....


**சென்னையில் அப்பார்ட்மெண்ட் மற்றும் தனி வீடு, வீட்டு மனைகள் வாங்க விற்க அணுகவும்.**

குருவருள் வேண்டி

## ம. அருள் பிரகாசம்

SRILEKHA HOMES

# Srilekha Homes

Gift to your dream

Plot No: 41, 2nd Floor, V.G.P. BABU NAGAR,
MEDAVAKKAM, CHENNAI - 100

Cell : 98841 27766 , 94449 88877

"சிவாய ஆறுமுக அரங்கமகா தேசிகாய நம"

அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்
பெற்றான் பொருள்வைப் புழி. —குறள் 226.

# சுந்தரானந்தர் எலக்ட்ரிகல்ஸ்

54—தெற்கு சிவன் கோயில் தெரு, வடபழனி,

சென்னை — 600 026.

✆ 044–24720499, 23721160.

# "அன்னதானம் செய்தால் துன்பங்கள் தீரும்"

குருவருள் வேண்டி . . .

# கணேஷ் ஹார்டுவேர்ஸ் & அலுமினியம்,

19/30, பிள்ளையார் கோவில் தெரு, வடபழனி,

சென்னை — 600 026.

Cell : 98400 – 20828.

✆ 044 – 23651284, 23652568.

## அருட்பிரகாச வள்ளலார் இராமலிங்க சுவாமிகள் அருளிய அருட்பெருஞ்ஜோதி அகவல்

என்றே என்னினும் இளமையோடு இருக்க
நன்றே தரும்ஒரு ஞானமா மருந்தே
மலப்பிணி தவிர்த்தருள் வலம்தரு கின்றதோர்
நலத்தகை அதுவென நாட்டிய மருந்தே
சிற்சபை நடுவே திருநடம் புரியும்
அற்புத மருந்தெனும் ஆனந்த மருந்தே

இடையுறப் படாத இயற்கை விளக்கமாய்த்
தடை ஒன்றும் இல்லாத் தகவுடை யதுவாய்
மாற்றிவை என்ன மதித்து அளப்பரிதாய்
ஊற்றமும் வண்ணமும் ஒருங்குடை அதுவாய் 1340

**ஜீவகாருண்ய ஒழுக்கமே கடவுள் வழிபாடு**

குருவருள் வேண்டி . . .

**ANU BUILDERS (INDIA) Pvt. Ltd.**

**Builders & Estates**

Plot No.37, 2nd Main Road,
V.G.P. Babu Nagar, Medavakkam,
Chennai - 600 100.
Phone: 2277 0495,
E-mail : anubuilders@yahoo.com
Website : www.anubuilders.in

# கவனகர் முழக்கம்

மாத இதழ் – ரூ. 25/–

கவனகரின்

- ஆழமான ஆன்மீக விளக்கங்கள்
- அறிவுபூர்வமான சிந்தனையைத் தூண்டும் கருத்து மலர்கள்.
- விந்தையான பதில்கள் மற்றும் அனைத்துச் சிறப்பம்சங்களும் நிறைந்த மாத இதழ்.

**தமிழர்களின் வாழ்க்கைப் பாதையை வெற்றிப்பாதையாக மாற்ற வழிகாட்டும் இதழ் இப்பொழுது புதிய வடிவமைப்புடன் வெளிவருகிறது**

# கவனகர் முழக்கம்

**ஆசிரியர் :-**

உலகத் தமிழர்களில் ஓர் அதிசய மனிதர், பல்கலை வித்தகர், பதினாறு கவனகர், நினைவு கலைச்செம்மல், மனிதகணிணி

**திருக்குறள்**

# இராம.கனகசுப்புரத்தினம்

மேலும் விபரங்களுக்கு . . .

1/8, மனோஜ் நகர், சாந்தி கியர்ஸ் பவுண்டரி சாலை, கண்ணம்பாளையம், சூலூர், கோவை–641 402. செல் : 94440 55166

மற்றும்

**A.செந்தில்குமார்**

4/248, Maxworth Nagar, சுண்ணாம்பு கௌத்தூர், கோவிலம்பாக்கம், சென்னை–117. ✆ 98414 64388.

மெகா டிவியில் தினமும் காலை 7.30 மணிக்கு கவனகர் அய்யா அவர்களின் வெற்றி நிச்சயம் நிகழ்ச்சி பார்த்து பயன்பெறுங்கள்

அகத்தியர் துணை

முருகப்பெருமானின் கல்கி அவதாரம்,

தவத்திரு **ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகள்**

அவர்கள் தலைமையில்

# ஸ்ரீ அகத்தியர் சன்மார்க்க அறக்கட்டளையின்

## நித்திய செயல்பாடுகள்

| | |
|---|---|
| காலை 6.00 | முருகப்பெருமானின் சரவண ஜோதி வழிபாடு<br>ஞானியர் அருளிய நூல்கள் பாராயணம்<br>தியானம் (நாமஜெபம்) |
| காலை 7.30 | பெருமாள்மலை அடிவாரத்தில் அன்னதானம். |
| காலை 8.00 | ஒங்காரக்குடிலில் அன்னதானம் |
| மதியம் 1.00 | ஒங்காரக்குடிலில் அன்னதானம் |
| **மதியம் 3.00** | முருகப்பெருமானின் கல்கி அவதாரம்<br>**ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகள் தரிசனம்** |
| மாலை 5.00 | கிராம அன்னதானம் |
| மாலை 6.00 | அருட்ஜோதி வழிபாடு – தியானம் (நாமஜெபம்)<br>ஆசான் அகத்தீசர் வழிபாடு |

குறிப்பு: பிரதி வியாழக்கிழமை தோறும் காலை 9.30 மணியளவில் ஞானியர்கள் சிறப்பு பூஜையும், குருநாதர் அவர்களின் தரிசனமும் நடைபெறும்.

ஸ்ரீ அகத்தியர் சன்மார்க்க அறக்கட்டளைக்காக வெளியிடுபவர்

S.செந்தில்குமார், நிர்வாக அறங்காவலர்,

113–நகர் விரிவாக்கம், துறையூர்–621 010, திருச்சி மாவட்டம்.

ஆசிரியர் – இரா.மாதவன்.

அச்சிட்டோர் :

இராம.தொல்காப்பியன்,

வாஞ்சி மறுதோன்றி அச்சகம், கூட்டுறவு நகர், துறையூர்.

# ஞானத்திருவடி - மாத இதழ்

## சந்தாப் படிவம்

☐ 1 வருடச் சந்தா ரூ.120/– ☐ 3 வருடச் சந்தா ரூ.350/–

திரு/திருமதி. : ____________________

முகவரி : ____________________

____________________

ஊர் : ____________ பின்கோடு ____________

வட்டம் : ____________ மாவட்டம் ____________

தொலைபேசி : ____________ (கைபேசி) ____________

சந்தா செலுத்தும் முறை

☐ CHEQUE காசோலை ☐ DD வரைவோலை ☐ MO–பணவிடை

☆ வரைவோலையை Sri Agathiar Sanmaarga Charitable Trust என்ற பெயரில் எடுக்கவும்.

☆ வரைவோலையை payable at Trichy (or) Thuraiyur என்று எடுக்கவும்.

☆ சந்தா அனுப்பும்போது கவரில் பணம் வைத்து அனுப்ப வேண்டாம். பணம் தவறினால் நிர்வாகம் பொறுப்பன்று.

☆ எங்களுக்கு தாங்கள் அனுப்பிய சந்தா கிடைத்த மாதத்திற்கு அடுத்த மாதம் 1–ம் தேதி முதல் மாதஇதழ் தங்களுக்கு அனுப்பப்படும்.

☆ தங்களின் தொலைபேசி எண்ணை மறவாமல் குறிப்பிடவும்.

நாள் :

செலுத்துபவர் கையொப்பம்

படிவத்தை பூர்த்தி செய்து கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பவும்.

**ஞானத்திருவடி - மாத இதழ்**

**ஸ்ரீ அகத்தியர் சன்மார்க்க அறக்கட்டளை**

ஓங்காரக்குடில், 113–நகர்விரிவாக்கம், துறையூர் – 621 010. திருச்சி மாவட்டம்.

ஓங்காரக்குடில் அலுவலக உபயோகத்திற்கு மட்டும்

ரசீது எண் : .................... தேதி : .................... ரூபாய் : ....................

சந்தாதாரர் முகவரி மாற்றம் இருப்பின் கடிதம் மூலம் தெரிவிக்கவும்